Registered as a Newspaper    சுடர் 06    விலை ரூபா 5-00

நல்லூர் பிரதேச நூலகம் யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 05 திருவள்ளுவர் ஆண்டு 2025 மாசி 29 (13.3.94) ஞாயிற்றுக்கிழமை ஓசை 23

## வடபகுதிக்கு வெளியே செல்வோரின் வீடுகள் பயன்படுத்துவோருக்கு!

வடபகுதிக்கு வெளியே செல்வோரின் வீடுகள், வீட்டுச் சொத்துக்களை அவ் வீட்டின் உரிமையாளரின் பெற்றோர்கள் தகுந்த காரணத்துடன் பயன்படுத்துவார்கள் எனில் அவர்களிடம் வாடகைப் பணம் அறவிடப்படமாட்டாது என வடபகுதிக்கு வெளியே செல்வோரின் சொத்துக்கள் கண்காணிப்புப் பிரிவு அறிவித்துள்ளது. இது குறித்து அப் பிரிவினர் வெளியிட்ட செய்திக்குறிப்பொன்றில்; மேற்படி வீடுகள், வீட்டுச் சொத்துக்களைப் பயன்படுத்தும் வீட்டு உரிமையாளர்களின் பெற்றோர்கள் அச்சொத்துக்களை தகுந்த காரணத்தோடு பயன்படுத்துவார்களேயானால் வாடகைப்பணம் அறவிடப்படமாட்டாது என்பதனை (6ஆம் பக்கம் பார்க்க)

## 9500மாணவர் பல்கலைக்கழகத்திற்கு அடுத்த ஆண்டில் அனுமதி பெறுவர்

(கொழும்பு)

பல்கலைக்கழக எதிர்வரும் கல்வி ஆண்டுக்கு ஒன்பதாயிரத்து ஐந்நூறு மாணவர்களை சேர்த்துக்கொள்வது என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும் உயர் கல்வி அமைச்சருக்கும் இடையே இடம்பெற்ற சந்திப்பின் போது மேற்படி விடயம் ஆராயப்பட்டதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இம்முறை அவ்வப்பகுதி பல்கலைக் கழகங்களிலுள்ள வளங்களையும் பீடங்களிலுள்ள வெற்றிடங்களையும் கருத்திற்கொண்டே மாணவர்களின் அனுமதித் தொகை தீர்மானிக்கப்படவுள்ளதாகவும் இந்நடைமுறை பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க. தி)

## விபத்தில் சிறுமி பலி

(வடமராட்சி)

லொறி-துவிச்சக்கர வண்டிக்கு இடையில் ஏற்பட்ட விபத்தில் பதினொரு வயது சிறுமி ஒருவர் மரணமானார்.

இவ்விபத்து சம்பவம்நெல்லியடி சந்திப் பகுதியில் நேற்று பிற்பகல் 2-00 மணியளவில் நடைபெற்றது. மேற்குறித்த பிரதான வீதியில் ஏற்பட்ட இவ் விபத்தின்போது மந்திகை புலோலி தெற்கைச் சேர்ந்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

### பருத்தித்துறை முனை கடற்பரப்பில்

## 'டோரா' விலிருந்து பீரங்கித் தாக்குதல் மீனவர் கருகி மரணம்; படகும் எரிந்தது

(வடமராட்சி)

பருத்தித்துறை முனைக் கடற்பரப்பில் ரோந்துசென்ற கடற்படையினர் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது கடும் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டதில் ஒரு படகு எரிந்தது.

இத் தாக்குதலுக்கு இலக்காகி ஒரு மீனவர் ஸ்தலத்தில் பலியானார். ஒரு மீனவர் படுகாயமடைந்தார்.

காங்கேசன் துறையிலிருந்து நேற்றுக் காலை 7 05 மணிக்கு வெற்றிலைக்கேணி பகுதி நோக்கி விரைந்து சென்ற 'டோரா' படகில் இருந்து மேற்கொள்ளப்பட்ட கடும் தாக்குதலின்போது முனைக் கடற்பரப்பில் வைத்து மயிலிட்டியிலிருந்து இடம்பெயர்ந்து முனையில் தங்கி வந்தவர்களில் ஒருவரான எட்டுப் பிள்ளைகளின் தந்தை மொ. பிரான்சிஸ் (வயது 38) என்பவர் அவர் சென்ற படகில் வைத்தே கொல்லப்பட்டார்.

அதே படகில் இவருடன் தொழிலுக்குச் சென்றிருந்த மற்றவர் மூன்று பிள்ளைகளின் தந்தையான தேவசகாயம் - செல்வராசா (வயது 30) என்பவர் படுகாயமடைந்தார். இவர் அவசர சிகிச்சைக்காக உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். கடற்படையினரின் குண்டுகள் இவரது முதுகுப் பகுதியை துளைத்துள்ளன.

இவர்கள் தொழிலுக்காக பயன்படுத்திய முனையைச் சேர்ந்த வின்சன்போல் என்பவரது படகு, வலை, என்ஜின் ஆகியன எரிந்து நாசமாகின. இதன் இழப்பீடு இரண்டுலட்சம் ரூபாவென மதிப்பீடு செய்யப்படுகிறது.

பின்னர் 10.00 மணியளவில் பலாலியிலிருந்து வந்த அவ்ரோ விமானம் சம்பவம் நடந்த கடற்பகுதி மீது பறந்து சென்றது. (யோ)

# தென்மாகாணசபை தேர்தலில் பெரும் வன்முறை வெடிக்கலாம்

## வாக்குச்சாவடிகளுக்கும் பாதுகாப்பு

[கொழும்பு]

இம்மாதம் 24ஆம்திகதி இடம்பெறவுள்ள தென் மாகாண சபை தேர்தலின் போது அங்கு பெரும் வன்முறை வெடிக்கலாம் என சிறிலங்கா புலனாய்வுத்துறை வட்டாரங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளது. இதைத் தொடர்ந்து தேர்தலின் போது ஏற்படும் வன்முறையைத் தவிர்க்கவும், தேர்தல் வாக்குச் சாவடிகளுக்கு மேலதிக பாதுகாப்பு வழங்கவும் தேர்தல் ஆணையாளர் முடிவு செய்துள்ளார்.

சிறிலங்கா புலனாய்வுத் துறையினர் பெற்றுக்கொண்டுள்ள தகவல்களின் அடிப்படையில் தென் மாகாண சபைத் தேர்தலின் போது [illegible]

ஈடுபடுத்த அவர் முடிவுசெய்துள்ளார்.

வாக்களிப்பு நிலையங்களில் ஏற்படும் அசம்பாவிதங்கள் முறைகேடுகளிற்கான முழுப் [illegible]

[illegible] துள்ளார்.

இதேவேளைதேர்தல் முறைகேடுகளில் பொலிசாரே ஈடுபட்டுவருவதாக எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டி வருகின்றமை [illegible]

## கலந்துரையாடல்

வெளிநாட்டு, உள் நாட்டு சஞ்சிகைகள், நாவல்கள் விற்பனை செய்யும் புத்தகசாலை உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் இன்று மாலை 5 00 மணிக்கு கோண்டாவில், அரசியல் துறை, மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது. இதில் யாழ். வர்த்தக சங்கத்திற்குட்பட்ட புத்தகசாலை உரிமையாளர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## சுவிஸ் அபிவிருத்தி நிதிக் குழுவினர் யாழ்ப்பாணம் வரவுள்ளனர்

(யாழ்ப்பாணம்)

ஹெல்வெற்ராஸ் சுவிஸ் அபிவிருத்திக் கூட்டு நிதி நிறுவனக் குழுவினர் யாழ்ப்பாணம் வரவுள்ளனர். வடபகுதியிலுள்ள அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்குவது பற்றி ஆராயவே இக்குழுவினர் யாழ்ப்பாணம் வரவுள்ளனர். இந்த நிறுவனம் தென்பகுதியிலுள்ள அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்கி வருவது [illegible] யாழ். அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் மேற்கொண்ட முயற்சியின் விளைவாகவே இக்குழுவினர் யாழ்ப்பாணம் வருகின்றனர். வரும் 19ஆம் திகதி இவர்கள் யாழ்ப்பாணம் வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கப்பல் பயணிகள் மீது படையினர் கெடுபிடி

(யாழ்ப்பாணம்)

வடபகுதியிலிருந்தும், வடபகுதி நோக்கியும் கப்பல் மூலம் [illegible] திருகோணமலை துறைமுகத்திலும் தீவிர சோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். [illegible]

டுள்ள தகவல்களின் அடிப்படையில் தென்மாகாண சபைத் தேர்தலின் போது பெரும் மோதல்கள் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும் இதற்கமையவே கூடுதல் பாதுகாப்பு வழங்க தான் முடிவுசெய்துள்ளதாகவும் தேர்தல் ஆணையாளர் கூறுகிறார்.

இதற்கென வழமையான பாதுகாப்பு நடவடிக்கைகளை விட மேலதிக ஆயுதம் தாங்கிய பொலிசாரை கடமையில்

வாக்களிப்பு நிலையங்களில் ஏற்படும் அசம்பாவிதங்கள் முறைகேடுகளிற்கான முழுப் பொறுப்பையும்தேர்தல் சாவடிகளில் கடமைக்கு அமர்த்தப்பட்டிருக்கும் பொலிசாரே பொறுப்பேற்கவேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஆயுதம் தரித்த அரசியற் கட்சி பிரமுகர்களோ அல்லது ஆதரவாளர்களோ வாக்குச் சாவடிகளுக்குள் செல்வது தடுக்கப்பட்டுள்ளது என தேர்தல் ஆணையாளர் அறிவித்

பட்டுவருவதாக எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தமிழரின் அபிலாசைகளை அரசால் அழிக்க முடியாது

(கொழும்பு)

தமிழரின் நியாயமான அபிலாசைகளை சிறிலங்கா அரசின் இராணுவ நடவடிக்கையினால் அழிக்கமுடியவில்லை; அழித்துவிடவும் முடியாது. இவ்வாறு கொழும்புப் பத்திரிகை ஒன்றில் அதன் அரசியல் விமர்சகர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழரின் நியாயமான அபிலாசைகளை அடக்குவதற்குச் சிறிலங்கா அரசு இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது. இதற்காக கடந்தகாலங்களில் சிறிலங்கா ராணுவம் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகள் அனைத்தும் தோல்விகண்டுள்ளன. இவை மக்களின் உயிர் அழிவுக்கும், சொத்துக்களின் சேதங்களுக்கும் வழிவகுத்துள்ளதாக அவர் மேலும் கூறியிருக்கிறார்.

தமிழரின் கோரிக்கைகள் குறித்துச் சிங்கள மக்களுக்கு அரசியல் வாதிகளால் தவறான விளக்கங்களே தரப்படுகின்றன. இவை பகைமை உணர்வை வளர்த்ததுடன் தீர்வொன்றை இனங்கண்டுகொள்ள முடியாத நிலைமையையும் ஏற்படுத்தியுள்ளது.

ஆனாலும் தமிழரின் பிரச்சினைகள் இன்று சர்வதேசமயப்பட்ட பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. மனித உரிமைகள், மற்றும் அகதிகள் தொடர்பான அமைப்புகளும்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# கிழக்கில் சர்வசனவாக்கெடுப்பு விரைவில் நடாத்தப்படும்

## தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் விஜேதுங்கா

(காலி)

வடக்கிலிருந்து கிழக்கைப் பிரிப்பதற்கான சர்வசன வாக்கெடுப்பை தான் விரைவில் நடத்தப் போவதாக சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவித்துள்ளார். கிழக்கில் இவ்வாறான தேர்தல்களை நடாத்துவது 'பயங்கரவாதத்தை' ஒழித்துக் கட்ட உதவும் எனவும் அவர் கூறினார்.

தென்மாகாணத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# ஜனநாயக அரசியலில் குதிக்க ஜே. வி. பிக்கு விருப்பமாம்

## தலைவர் சோமவன்ச கடிதம்

(கொழும்பு)

சிறிலங்காவின் ஜனநாயக அரசியலில் மீண்டும் ஈடுபட தமக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஜே. வி. பி. இயக்கத்தின் தற்போதைய தலைவர் சோமவன்ச அமரசிங்க கோரியுள்ளார். வெளிநாடொன்றில்தலைமறைவாக இருக்கும் இவர் சிறிலங்கா பிரகதிசீல பெரமுனைச் செயலாளர் ஆரிய புலேகொடவுக்கு எழுதிய கடிதத்திலேயே அவர் இவ்வாறு எழுதியுள்ளார்.

எமது கொள்கைகளைப் புரிந்துகொண்டு செயற்படக் கூடிய இளைஞர், யுவதிகள் இன்னமும் எம்வசமுள்ளனர். இவர்கள் இன்னமும் எமக்கு ஒத்துழைப்பு வழங்கவும் தயாராகவுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இக் கடிதம் தொடர்பாக லண்டன் பி. பி. சி. சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் அவர் கூறுகையில்; இன்று சிறிலங்கா அரசியலிலிருந்து புத்திஜீவிகள் விலகியுள்ளனர். இளைஞர்கள் இவ் அரசியலை வெறுத்து ஒதுக்கியுள்ளனர். எனவே இந்த நிலையில் ஜனதா விமுக்தி பெரமுனையின் சேவை அவசியமானது

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# இலங்கைத் தமிழர் மூவர் முகாமிலிருந்து தப்பினர்

இந்தியாவில் உள்ள விசேட தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மூன்று இலங்கைத் தமிழர்கள் அம் முகாமில் இருந்து நேற்று முன்தினமிரவு தப்பியோடியுள்ளனர். கடவுச் சீட்டு எதுவும் இன்றி இந்தியாவில் தங்கியிருந்து பல குற்றச் செயல்கள் புரிந்தமையால் கைது செய்யப்பட்டு மேற்படி சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.

னம் தென்பகுதியிலுள்ள அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

ஹெல்வெற்ராஸ் சுவிஸ் ஆசியப் பிராந்தியப் பொறுப்பாளர் திருமதி ஆன் சேசப்ஸ், இலங்கை வதிவிடப் பிரதிநிதி ஒட்டோ குட்ஸ் மற்றும் செயற் திட்ட அதிகாரி எம். மஹ்ரூப் ஆகியோர் இக்குழுவில் இடம் பெறுகின்றனர்.

வடபகுதியிலிருந்தும், வடபகுதி நோக்கியும் கப்பல் மூலம் பயணம் செய்யும் பயணிகள் மீது காங்கேசன்துறையிலும், திருகோணமலையிலும் படையினர் பல கெடுபிடி நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக தெரியவருகிறது. பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து கப்பலில் ஏற்றிக்கொள்ளப்படும் பயணிகள் காங்கேசன்துறையிலும் பின்னர் திருகோணமலையிலும் தீவிர சோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். அதேபோல் திருகோணமலையில் கப்பலில் ஏற்றப்படும்போதும் பின்னர் காங்கேசன்துறையிலும் பயணிகள் படையினரின் தீவிர சோதனைக்கும் கெடுபிடிகளுக்கும் உள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

படையினரின் இக்கெடுபிடிச் சோதனைகளை தளர்த்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# வட - கிழக்குப் பகுதிகளை ஒரு பிரதேச ஆயர்மன்றமாக்குக

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், மன்னார், திருமலை மற்றும் மட்டுநகர் மறைமாவட்டங்களை ஒரு பிரதேச ஆயர் மன்றமாக இணைப்பதற்குரிய நடவடிக்கைகளில் யாழ், திருச்சபை ஈடுபட வேண்டும் என்ற விருப்பம் யாழ். கத்தோலிக்க திருச்சபை மேய்ப்புப் பணி மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டது நேற்று நடைபெற்ற மேய்ப்புப் பணி மகாநாட்டின் ஐந்தாவது அமர்விலேயே இவ்விருப்பம் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மனித முன்னேற்ற நிலையம் தற்போதைய போர்ச் சூழ்நிலையில் முக்கியத்துவம் கொடுத்துள்ளது. அதேவேளை இப்பணியுடன் காலத்திற்கும் தேவைக்கும் ஏற்ப சுயதொழில் முயற்சிகள் சிறுகைத்தொழில்கள் ஊக்குவிக்க வேண்டும்.

தற்காலப் போர்ச் சூழலைக் கணக்கில் எடுக்கப்பட்டு நோயாளர் பராமரிப்பு, இரத்த தானம் போன்ற வைத்தியசாலைப் பணிகள் முன்னேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முறைசாராக் கல்வியில் தொழில் நுட்ப நிறுவனங்களான லோங், பற்றியன், எமிலியாஜூஸ் போன்ற நிறுவனங்களைப் புனரமைக்க வேண்டும் என்றும் இம் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டன.

# வடபகுதிக்கு புதிய விமானப்படை தளபதி

(கொழும்பு)

சிறிலங்கா விமானப்படையின் வடபகுதித் தளபதியாக அனுபவம் மிக்க விமானி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். வடபகுதி விமானப் படைத் தளபதியாக இருந்த விங் கமாண்டர் ஜெயலக் வீரக்கொடி விமானப்படை நடவடிக்கை இயக்குநராக நியமனம் பெற்றுள்ளார். இதனைக் கொழும்பில் வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகை தெரிவிக்கின்றது.

## இராணுவ நடவடிக்கையால்

# மரணமடைந்தவர்களுக்கு நட்ட ஈட்டுக்கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மரணமடைந்வர்களுக்கான நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவு வழங்கும் திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்துவது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது.

இராணுவ நடவடிக்கைகளின் போது மரணமடைந்தவர்களுக்கு முன்னர் நட்ட ஈட்டுத் தொகை வழங்கப்பட்டு வந்தது இத்திட்டம் தற்பொழுது நிறுத்தப்பட்டுள்ளது. மேற்படி இராணுவ நடவடிக்கைகளினால் மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு இந்த நட்ட ஈட்டுத் தொகையை வழங்குவது குறித்து ஆராய இருப்பதாக நிதியமைச்சின் செயலாளர் உறுதியளித்துள்ளார். கொழும்பில் கடந்த மாத இறுதியில் நடைபெற்ற கூட்டமொன்றின் போது மேற்படி விடயம் ஆராயப்பட்டது.

(ஈ. நி)

# வரி விளம்பரம்

**'அகிலன்ஸ்'**

சகலவிதமான வாகனங்களின் இலக்கத் தகடுகளும் அழகிய முறையில் எழுதிக் கொடுப்பவர் (மஞ்சள் ÷ கறுப்பு) எழுத்தோவியர் அகிலன்ஸ், 426 கண்டி வீதி, அரியாலை. (7702)

**பசன் கன்றுகள் விற்பனைக்கு**

ரூபா 10/- மட்டுமே. சொற்பளவு கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. TASTE LINE INDUSTRIES (PVT) LTD. No- 14, Seenier Lane, Jaffna- (சி-8816)

**SPECIAL ENGLISH WITH GRAMMAR**

ஃ BASIC ஃ SPOKEN

By experienced teacher, Classes start on 15-3-94 Tue 3-00 P. M. SHAMROCK, J-CHUNDIKULI. (7706)

**இறைச்சிக்கோழி**

இறைச்சி கோழிகள் எந்நேரமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளவும், உங்கள் கோழிகளை சந்தைப்படுத்தவும் சுவையருவி கோழிப் பண்ணை பின் நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-8799)

**விற்பனைக்கு**

அரிய பல Catalogues (வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள், ஜெனரேட்டர்கள் மற்றும்பல); OXFORD, LONGMAN ஆங்கில அகராதிகள், யோகாசனப் புத்தகங்கள். 11, இராமையா செட்டியார் லேன், சாந்தி சினிமா- 13-3-94 8-00—5-30 வரை. (7714)

**விற்பனைக்கு**

Singer Industriesன் Art Embroidery, Lace Work, Dress Making புத்தகங்கள் Accounts, Audit Books, துவிச்சக்கரவண்டியில் இயக்கக் கூடிய 24 Volt Japan DC Battery Charge- யாழ். போதனாவைத்தியசாலைக்கு முன்பான ஒழுங்கையில், சாந்தி சினிமா, 13-3-94 8-00—5-30 வரை. (7715)

## தவறிவிட்டது

நீர்வேலிச் சந்திக்கும் இருபாலைச் சந்திக்கும் இடையில் 08-03-94 அன்று ஒரு தாலிக்கொடி (7 பவுண்) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கோப்பாய் காவல்துறை பணிமனையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (7724)

## ஆறாண்டு நினைவலைகள்

13-03-94



**லெப். இமெல்டா (அ. மரியகோசி)**

பிறப்பு: 6-05-1963

வீரச்சாவு: 13-03-1988

"ஜீவியத்தில் என்னை நேசித்தவர்களே மரணத்திலும் என்னை நேசியுங்கள்"

மண்ணின் விடுதலைக்கு மாண்புடன் உழைத்தவுன் எண்ணம் ஈடேற உழைக்கின்றோம்
மீண்டும் நீ வந்துவிடு — விடுதலையை
கண்டு மகிழ்ந்து விடு.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக குருநகர் புனித யாகப்பர் ஆலயம் யாழ். அடைக்கலநாயகி (O L.R.) ஆலயம், புனித மரியாள் பேராலயம், பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயம், மணிப்புரி கர்த்தர் தேவாலயம் ஆகிய இடங்களில் 14-03-94 காலையில் நடைபெற இருக்கும் இரங்கற் திருப்பலியில் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இவரின் பிரிவால் துயருறும்
அன்புப் பெற்றோர்
யோவான் அமிர்தநாதர் குடும்பத்தினர்
குருநகர்,

(7725)

## நினைவு கூருகின்றோம்...

**1994-03-13**

1986-ம் ஆண்டு இத்தினத்தில் யாழ்-காங்கேசன் துறை, மயிலிட்டி பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலிற் கொல்லப்பட்ட 02 குழந்தைகள், ஒரு பெண் உட்பட 04 தமிழர்கள்.

1988-ம் ஆண்டு இத்தினத்தில் இளி-வேணாவில் பகுதியில் எமது முகாம் ஒன்றின் மீது, இந்தியப்படையினர் மேற்கொண்ட முற்றுகையின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**சுரபி** (மஞ்சுளா-திருநகர்-கிளிநொச்சி)

**லெப். இமெல்டா** (மரியகோசி அமிர்தநாதன் - மணியந்தோட்டம், கொழும்புத்துறை - யாழ்)

**றொசானி** (சுதாங்கனி செல்லத்துரை - சந்திரோதயம், கொடிகாமம்-யாழ்)

**சுஜி** (துஷ்யந்தி நடேசபிள்ளை-நீர்வேலி தெற்கு, கோப்பாய்-யாழ்)

இதே சம்பவத்தின் போது சயனைற் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**ஹெலன்** (அனுசியா இராசதுரை-வெடியரசன் வீதி, காரைநகர்-யாழ்)

**டொறின்** (சாந்தினி துரைசிங்கம்-வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமம்-யாழ்.

முல்லைத்தீவு-முத்தையன்கட்டுப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய,

**வின்சன்** (8-ம் வாய்க்கால்-கிளிநொச்சி)

**மொட்டையப்பு** (சுந்தரலிங்கம் கிருஷ்ணசிங்கம் (சின்னன்) பெரியவிளான், இளவாலை-யாழ்)

இந்தியாவிலிருந்து பேச்சுவார்த்தைக்கென அழைத்துவரப்பட்டு, முல்லைத்தீவு, தேவிபுரம்பகுதியில் வைத்து இந்தியப்படையினரால் நயவஞ்சகமாகச் சுட்டுக் கொல்லப்பட்ட,

**லெப். கேணல் ஜொனி** (விக்னேஸ்வரன் விஜயகுமார்-புலோலிதெற்கு, பருத்தித்துறை-யாழ்)

1989-ம் ஆண்டு யாழ். கலட்டிப்பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின் போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**பாபு** (பேரின்பநாயகம் குணநாயகம்-குணநாயகம்வீதி, திருநெல்வேலி கிழக்கு - யாழ்)

மன்னாரில் தேசவிரோதிகளினால் அடித்துக் கொல்லப்பட்ட தமிழ் மாணவன்.

1991-ம் ஆண்டு மட்டு தன்னாமுனை, சீனன்வாடிப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**மகேந்திரா** (சிற்றம்பலம் கோணேஸ்வரன் - பெரிய உப்போடை-மட்டு)

மட்டு-செட்டியார் வீதியில் இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்ட வந்தாறுமூலை வளியான தமிழினைஞன்; செங்கலடியைச் சேர்ந்த வயோதிபர்.

## சிறந்த இனக் காளைகள் விற்பனைக்கு

இனைப்படுத்தலுக்கு பயன்படுத்தக் கூடிய சிறந்த இனக் காளைகளும் (யேர்சிக் கலப்பு 75வீதம்) வளர் கன்றுகளும் விற்பனைக்குண்டு. 16-3-1994 புதன் கிழமை மாலை 3,00 மணிக்கு கீழ்க்காணும் முகவரியில் கூறு விற்பனை நடைபெறும்.

இடம்:

'அன்பு பண்ணை'
கலாசாலை வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(சி-8829)

உ

ஓம் சக்தி

சண்டிலிப்பாய் - சீரணி
அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான
விநாயகர் சித்திரத் தேர்

## பவளக்கால் நாட்டும் வைபவம்

காலம்: 14-03-1994 திங்கள்

நேரம்: பகல் 11-00 மணி — 12-00 மணி வரை

புத்தூர் காளிகா சிற்பாலயம்
திரு. செ. பாலச்சந்திரன் குழுவினரின்
கலைத்திறனில் உருவாகிவரும் விநாயகர் சித்திரத் தேரின்

"பவளக்கால் நாட்டும் வைபவம்"

நடைபெற இறையருள் கூடியுள்ளது அன்பர்கள் அடியார்கள் அனைவரும் வருகைதந்து விழாவை சிறப்பிக்குமாறு பணிவன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
தர்மகர்த்தா சபை

(7726)

1992-ம் ஆண்டு தமிழீழக் கடற்பரப்பில் (குருநகர்ப்பகுதியில்) 03 தமிழர்கள்.

1993-ம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். திருவருட்செல்வன் -மோகன்ராம்** (பூபாலப்பிள்ளை சிறி-நாவற்குடா-மட்டு)

**லெப். மாறன்** (மகாலிங்கம் வரதராஜா-17-ம் கட்டை, கொக்குத்தொடுவாய்-மணலாறு)

யாழ்-பண்டத்தரிப்புப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடன் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**அன்சார் - தாமோதரன்** (சிவரத்தினம் சிறீகாந்-ஓடக்கரை-பருத்தித்துறை)

ஆகியோரை இந்நாளில்

நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-8828)

தேநீர்

புதிய யுகத்தின் ஆரோக்கிய பானம்!

தனித்துவமான புதுச்சுவை!

தேநீர்
பிரியர்களிற்கு
ஓர் நற்செய்தி

தனித்துவமான புதுச்சுவை!

# "லிவர் பிறதேர்ஸ்" அமைப்பின் மற்றுமோர்

புதிய அதி உன்னத படைப்பு

# லிப்டன் - சிலோன்டா
# லிப்டன் - லாவோஜி

— மிகுதியான உழைப்புத் தேவைப்படும் இக்காலத்தில் ஏற்படும் அதிகமான களைப்பினைப் போக்கி உற்சாகம் ஊட்டி புத்துணர்வை அளிக்கிறது.

— இங்கிலாந்தின் அனுமதியுடனும் அனுசரணையுடனும் பல்லாண்டுகளாகத் தரமான உற்பத்திகளை வழங்கிவரும் லிவர் நிபுணர்களினால் விசேடமாகத் தேர்ந்து கலவைசெய்யப்பட்டது.

— அன்றே கொய்த அருஞ்சுவைத் தேயிலையின் அதே நறுமணமும் நறுஞ்சுவையும் குன்றாத வகையில் விசேடமாக அடைக்கப்பட்ட 400g, 200g, 100g, 11g பக்கட்டுக்களில் கிடைக்கிறது.

விநியோகஸ்தர்கள்:

**சிறீ விக்கினேஸ்வரா களஞ்சியம்**

இல. 150, கண்டி வீதி,
சாவகச்சேரி.

(7732)

நல்லூர் இ... நூலகம்
... மன்றம்
யாழ்ப்பாணம்

# சுயநலனுக்காக கட்சி மாறுவோருக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவர்

**- திருமதி சிறிமானி அத்துலத் முதலி**

(கொழும்பு)

தமது சுய லாபத்திற்காக சிலர் கட்சியைக் காட்டிக் கொடுக்க முற்படுவதாகவும், இதற்கு தென் மாகாணசபை மக்கள் தகுந்தவொரு பாடத்தை கற்பிக்க வேண்டும் என திருமதி சிறிமானி அத்துலத் முதலி தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினர் போட்டியிடுவதாகவும், அவர்களுக்கு தென்மாகாண வாக்காளர் அளிக்கும் வாக்கு ஒவ்வொன்றும் உன்னதமானது என்றும், தனது கணவரின் இலட்சியத்துக்கு கிடைக்கும் வரவேற்பை அறியும் சந்தர்ப்பமாக இருக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

தமது கட்சி உறுப்பினர்களை ஆதரித்து காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் தான் பிரசாரம் செய்யப்போவதாகவும் இதில் எந்த மாற்றமும் இல்லை என தெரிவித்துள்ளார்.

# கொழும்பில் கைதான இளைஞரிடம் வெடிபொருள்

(கொழும்பு)

கொட்டாஞ்சேனையில் சந்தேகத்தின் பேரில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட சுப்பிரமணியம் பேபி என்ற இளைஞரிடமிருந்து பல பயங்கர ஆயுதங்கள் மீட்கப்பட்டதாக கொட்டாஞ்சேனை பொலிசார் தெரிவித்தனர்.

ஜம்பெட்டா வீதியில் அதிகாலை கைது செய்யப்பட்ட இவரிடம் 82 அங்குல நீள 12 'போர்' எல்.பி.ஜி. எல். துப்பாக்கி, உள்ளூர் தயாரிப்பு தகர டப்பா குண்டு, ஆறு சுற்று ரவைகள், வெடிக்கவைக்கும் கருவி, ஆறு வோல்ற் பற்றரி என்பன கைப்பற்றப்பட்டன.

# கண்டெடுப்பு

பருத்தித்துறை இறங்குதுறைப் பகுதியில் இருந்து கண்டெடுக்கப்பட்ட திறப்புக் கோர்வை ஒன்று அப்பகுதியில் உள்ள புனர்வாழ்வு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரத்தைக் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம். (யோ)

# கூரிய கத்தியால் படுகாயம்

மூகமாலைப்பகுதியில் இரவு வேளையில் ஒருவரை மற்றொருவர் கூரிய கத்திபோன்ற ஆயுதத்தால் குத்தி கடுமையாகப் படுகாயப்படுத்தியுள்ளார்.

மூகமாலை எழுதுமட்டுவாளைச் சேர்ந்த மு. ஜெயம் (39 வயது) என்பவர் தனது நண்பர் ஒருவரின் வீட்டுக்குச் சென்ற வேளை இனம் தெரியாத நபர்களால் கத்தி போன்ற கூரிய ஆயுதத்தால் வயிற்றில் பலமாக குத்தி தாக்கியதால் இவர் மயங்கிய நிலையில் சாவகச்சேரி மருத்துவ மனைக்கு கொண்டுவரப்பட்டு மேலும் விசேட சிகிச்சைக்காக யாழ். மருத்துவ மனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (86)

# உணவு போசாக்கு குழு அமைப்பு

பருத்தித்துறை பிரதேசப் பகுதியில் உணவு போஷாக்கு மேம்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கென பருத்தித்துறை பிரதேச உணவு போசாக்கு குழு ஒன்று பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. ஆ. சிவசுவாமியினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. இவ் உணவு போஷாக்கு குழுவில் கல்வித்திணைக்களம், சுகாதாரத்திணைக்களம் உள்ளூராட்சித்திணைக்களம், கால்நடைத்திணைக்களம்விவசாயத்திணைக்களம், ஆயுர்வேதத் திணைக்களங்களின் அதிகாரிகள், இலங்கை வங்கி பொருள் அபிவிருத்திச் சபை அதிகாரிகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கூட்டுறவுச்சங்கங்களின் பிரதிநிதிகள், சன சமூகநிலையங்களின் சமாசங்களின் பிரதிநிதிகள், கிராமசேவை அலு

# 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



**லெப்டினன்ட் கேணல் ஜொனி**

**(திரு. விக்கினேஸ்வரன் விஜயகுமார்)**

(சாரையடி, புலோலி)

| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
| --- | --- |
| 21. 05. 1962 | 13. 08. 1988 |

இந்திய உளவுப் பிரிவினால் இந்தியாவிலிருந்து பேச்சுவார்த்தைக்கென அழைத்து வரப்பட்டு முல்லைத்தீவு மாவட்டம் தேவிபுரம் எனும் இடத்தில்

# தமிழராகப் பிறந்தால் மட்டுமே பிரச்சினையை உணர முடியும்

## சிறிலங்கா பிரதமருக்கு குமார் கடிதம்

(கொழும்பு)

தமிழர்களின் பிரச்சினைகளையோ அல்லது தமிழர்களின் அடிப்படைத் தேவைகளையோ நீங்கள் தமிழராகப் பிறப்பதன் மூலம் மட்டுமே உணர்ந்துகொள்ள முடியும். இவ்வாறு சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கு எழுதிய கடிதத்தில் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் குமார் பொன்னம்பலம் எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும்குறிப்பிடுகையில், இவ்வாறில்லாத எந்தவொரு நிலையில் இருந்தும் நீங்கள் தமிழரின் பிரச்சினை பற்றி ஜீரணிக்கவோ அல்லது புரிந்து கொள்ளவோ முடியாது. ஏனெனில் தமிழராகப்பிறந்த ஒவ்வொருவரது வேதனையும் உங்களால் வகித்துக் கூடப் பார்க்கமுடியாத நிலையே காணப்படுகிறது. அன்று தொடக்கம் இன்று வரை நடைபெற்று வரும் புறக்கணிப்புகளும், எதிர்பார்ப்புகளும் முறியடிக்கப்பட்டமை இந்த நிலை உச்சக்கட்டத்தை அடைய வழிவகுத்துள்ளது. இதனை யாரும் மறுக்கமுடியாது. நீங்களும், உங்கள் ஜனாதிபதியும் அரசியல் படிக்கவரும் முன்னரே இந்த நிலை தோன்றிவிட்டது எனவே நீங்கள் தெளிவான விரிவான அரசியல் ... டுமாயின் எமக்கு நடந்த எற்றை உண்மையாகப் பின் நோக்கிப் பார்க்கவும்.

தமிழர்களுக்கு ஒரு பிரச்சினையும் இல்லை என்று கூறியமைக்கு எதிர்ப்பு தெரிவித்து 1993 ஆகஸ்ட் 13-ம் நாள் ஜனாதிபதிக்கு ஒரு கடிதம் எழுதினேன். ஆனால் அக்கடிதம் கிடைத்ததா இல்லையா என்பது பற்றிக்கூட எனக்கு எதுவும் அறியத் தரப்படவில்லை. இக்கடிதத்திற்கு பதில்வரும் என்று நான் ஆவலுடன் காத்திருக்கும் அதே வேளையில், இதே கருத்தை தொடர்ந்தும் வலியுறுத்தும் வகையில் ஜனாதிபதி மக்கள் முன்னிலையில் கூறிவருகின்றார்.

இது சிங்கள பௌத்த நாடு என ஜனாதிபதி கூறுவாராயின், தமிழர்களுக்கு ஒரு பிரச்சினையும் இல்லை என்று கூறுவாராயின் தமிழர்கள் கதிரைப் பிரஜைகளாகப் பிரிந்து செல்வதற்கு அவர் வழிவகுக்கவேண்டும்; தமிழர்கள் தொடர்ந்தும் இரண்டாம் தரப் பிரஜைகளாக சீவிக்கத் தயாராக இல்லை என்பதை நீங்கள் உணரவேண்டும். இதுவே இன்றுள்ளபிரச்சனை இதற்கான தீர்வைத் தான் அவர்கள் வேண்டி நிற்கின்றார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# மருத்துவபீட வெட்டுப்புள்ளி தீர்மானிப்பதில் தாமதம்

(கொழும்பு)

மருத்துவப்பீட அனுமதிக்கான மாணவர்களின் வெட்டுப் புள்ளிகளை வெளியிடும் நடவடிக்கைகள் தாமதப்படுத்தப்படுவதாக தெரிய வருகிறது.

கொழும்பு, ருகுணு பல்கலைக் கழக அதிகாரிகள் அப்பீடங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை கடந்த தடவையை விட குறைக்குமாறு கேட்டுக் கொண்டதே இத்தாமதத்திற்கு காரணம் எனக் கூறப்படுகிறது.

ஆனால் இவர்களது கோரிக்கைகள் தொடர்பாக இது வரை எதுவித முடிவும் எடுக்கப்படவில்லை. ஆனால் இவ்விரு பல்கலைக்கழக அதிகாரிகள் பல்கலைக் கழக விவகார அமைச்சரை இவ் விடயம் தொடர்பாக சந்திப்பர் என பல்கலைக்கழக மானியக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பு பல்கலைக் கழக மருத்துவ பீடத்தில் 175 மாணவர்களுக்கான வசதிகளே இருக்கின்றன. ஆனால் சென்ற முறை 193 மாணவர்கள் அங்கு அனுமதிக்கப்பட்டனர். ருகுணு பல்கலைக் கழக மருத்துவ பீடத்தில் 120 மாணவர்க்கான வசதியே இருந்தபோதும் கடந்தமுறை 128 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

எனவே மருத்துவபீடத்திற்கு அனுமதிக்கப்படும் மாணவர் எண்ணிக்கையை தீர்மானிப்பதில் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளதால் மருத்துவத்துறைக்கான வெட்டுப்புள்ளிகள் நிர்ணயிக்க முடியாதிருப்பதாக பல்கலைக்கழக மானியக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். மருத்துவம் தவிர்ந்த ஏனைய துறைகளுக்கான வெட்டுப்புள்ளிகள் நிர்ணயிக்கப்பட்டுவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# தமிழ் இளைஞர்களுக்கு கடன் வழங்க வங்கி தயக்கம்

(கொழும்பு)

தடுத்து வைக்கப்பட்டு புனர்வாழ்வு அளிக்கப்படும் 102 தமிழ் இளைஞர்களுக்கு சுய தொழில் வாய்ப்பு வழங்கு... ந்த அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இந்த 102 பேரில் பெரும்பாலானவர்கள் யாழ். மாவட்ட இளைஞர்களாவர்.

# கோவில்களை மீளத் திறக்க இராணுவத்தை விலக்கவும்

**- இந்து இளைஞர் பேரவை கோரும்**

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கைகளால் பூட்டப்பட்டுள்ள இந்து மதஆலயங்களை மீளத் திறக்கவும், அதற்கு வழிசெய்யும் விதத்தில் அப்பகுதியிலிருந்து இராணுவத்தை விலக்குமாறும் யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவை கோரிக்கை விடுக்கவுள்ளது.

எதிர்வரும் 26-ம், 27-ம், திகதிகளில் இலங்கை இந்து இளைஞர் பேரவையின் பதினோராவது தேசிய மாநாடு இடம் பெறும் போது அதில் யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவை முன் வைக்கவுள்ள முக்கிய பிரேரணைகளில் இது ஒன்றாக இருக்குமென பேரவையின் செய்திக் குறிப்பு ஒன்றிலிருந்து தெரியவருகிறது உடனடியாக யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டு பேச்சுவார்த்தை மூலம் வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டுமென்றும் பூஜைப் பொருட்கள் உட்பட வடபகுதிமீது பொருட்கள் கொண்டு வரப்படுவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடைகளை நீக்குமாறும் இத்தேசிய மாநாட்டில் கோரிக்கைகள் முன்வைக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## மனையியல் டிப்ளோமா

# சான்றிதழ் பெற்றோருக்கு உதவி ஆசிரியர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

கல்விச்சேவை சபையினால் மனையியல் டிப்ளோமா பெற்றவர்களுக்கு உதவி ஆசிரியர் நியமனம் வழங்குவது தொடர்பாக விண்ணப்பங்களை கோரியுள்ளது.

உயர் கல்வி அமைச்சின் கீழுள்ள தொழில் நுட்பக் கல்லூரியில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்பட்ட மனையியல் டிப்ளோமா சான்றிதழ் அல்லது அதைவிட உயர்தகைமையுடையவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய இறுதித்திகதி இம்மாதம் 15 ஆம் திகதியாகும் இது தொடர்பான மாதிரி விண்ணப்பத்தையும் வர்த்தமானி அறிவித்தலையும் எமது அலுவலகத்தில் பார்வையிடலாம்.

இந்திய உளவுப் பிரிவினால் இந்தியாவிலிருந்து பேச்சுவார்த்தைக்கென அழைத்து வரப்பட்டு முல்லைத்தீவு மாவட்டம் தேவிபுரம் எனும் இடத்தில் இந்திய ஆக்கிரமிப்புப் படையால் நயவஞ்சகமாக சுட்டுக் கொல்லப்பட்ட லெப்டினன்ட்கேணல் ஜொனியை இந்நாளில் நினைவு கூருகின்றோம். இவரின் ஆத்மா சாந்தியடையவும் கனவு நனவாகவும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தந்தை, சகோதரிகள்,
மைத்துனர்கள், மருமக்கள்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

சாரையடி, புலோலி.
(7692)

## 31-ம் நாள் நினைவுகள்



தாய்மடி:
30 - 07 - 1972

இறையடி:
12 - 02 - 1994

### மரியாம்பிள்ளை அருள்தாஸ் (சுசி)

கல்வியும் கலைவரமும் கருமினிய கனிமுகமும்
சொல்லிலும் செயலிலும் தெளிவுமுறுதி அன்பும் மேவும்
வள்ளலே! உன்வதனம்கண்டு மாதமொன்று நகர்ந்தும் எங்கள்
உள்ளமோ உருகிநிந்தன் நினைவிழக்க மறுக்குதையா.

அன்னாரின் ஆத்மசாந்திக்காக 14-3-94 திங்கள் காலை 7.00 மணிக்கு இத்தாவில், பளை புனித பார்பரம்மா ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியிலும் வீட்டில் நடைபெறும் நிகழ்வுகளிலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

த. மரியாம்பிள்ளை
இத்தாவில், பளை.
- குடும்பத்தினர்
(7718)

நிதிகள், சன சமூகநிலையங்களின் சமாசங்களின் பிரதிநிதிகள், கிராமசேவை அலுவலர்கள் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இந்த உணவு போசாக்குத் திட்டம் கிராமங்கள் தோறும் கிராமப்பகுதிகளிலுள்ள மூல வளங்களைப்பயன்படுத்தி அமுல் செய்யப்படவுள்ளது திட்டத்தைமக்களுக்குமேலும் நன்மைபயக்கும் வகையில் விஸ்தரிக்க கொள்கை திட்டமிடல் பகுதியிலிருந்து நிதி கோருவதற்கும் இவ் உணவு போஷாக்கு குழு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்த உணவு போசாக்கு குழு பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் வசதிகள் மிகக்குறைந்த கெருடாவில் பகுதியில் ஐந்து கிராமசேவை அலுவலர் பிரிவுகளில் முதலாவது உணவு போஷாக்கு மேம்பாட்டுத்திட்டத்தை அமுல் செய்வதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது இதற்கென உணவு போஷாக்கு மேம்பாட்டு நடவடிக்கை உபகுழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இக்குழு தனது முதற்கட்ட வேலைகளை ஆரம்பித்துள்ளதாகவும் பிரதேச செயலர் திரு. வேலாயுதம் தெரிவித்தார். (25) (மோ)

### அதிக பரிசு பெற்றது

தென்மராட்சிக் கல்விக் கோட்டத்தில் அண்மையில் நடைபெற்ற கணித விஞ்ஞான உபகரணத் தயாரிப்பு போட்டியில் மந்துவில் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் பத்துப் பரிசுகளைப் பெற்றுள்ளது. இப்பாடசாலையைச்சேர்ந்த யோ. இளையவரன், பா. கணேசலிங்கம், மா. அமலதீபன், யோ. யுதர்சன், இ. விமலேந்திரன், செ. நீதிவாணன் ஆகியோர் பரிசில்கள் பெற்றுள்ளனர். சுமார் அறுபது பாடசாலைகள் பங்குபற்றிய இப்போட்டியில் மந்துவில் றோமன் கத்தோலிக்க பாடசாலை அதிக பரிசுகளைப் பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

வாழ்வு அளிக்கப்படும் 102 தமிழ் இளைஞர்களுக்கு சுயதொழில் வாய்ப்பு வழங்கு முகமாக அவர்களுக்கு கடன் கொடுக்க வங்கிகள் தயக்கம் காட்டுகின்றன. இதனால் இவர்களை விடுதலை செய்வதில் தாமதம் ஏற்படுகிறது என புனர்வாழ்வு செயலாளர் நாயக அலுவலகத்தைச் சேர்

இந்த 102 பேரில் பெரும்பாலானவர்கள் யாழ். மாவட்ட இளைஞர்களாவர். தொழில்சார் புனர்வாழ்வு அளிக்கப்படும் ஜே. வி. பி. சந்தேக நபர்கள் விடுதலையாகும்போது வங்கிகள் முன் வந்து கடன் வழங்குகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## மாட்டு இறைச்சிக்குள் வெடிப் பொருள் கடத்தல்

(கொழும்பு)

இராணுவ முகாம்களுக்கு இறைச்சி வழங்குவதாக தெரிவித்து வெடிகுண்டுகளையும் தோட்டாக்களையும் இறந்த மாட்டிற்குள் வைத்துக் கடத்தும் கும்பல் ஒன்று தொடர்பான தகவல் கிடைத்துள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக தெரிவிக்கப்படுவதாவது: திருகோணமலையிலிருந்து மாடுகளை ஏற்றிவந்த லொறி ஒன்று மிகிந்துபுர இராணுவ தடை முகாமில் சோதனைக்காக நிறுத்தப்பட்டது இந்த லொறியில் நான்கு முஸ்லிம்கள் இருந்துள்ளனர் இவர்களிடம் மாடுகளை ஏற்றிச்செல்ல அனுமதிப் பத்திரம் இருக்கவில்லை இதுதொடர்பாக தடைமுகாம் இராணுவத்தினர் விசாரணை செய்தபோது அவர்கள் இராணுவ முகாம்களுக்கு இறைச்சி விநியோகிக்க மாடுகளையும் ஆடுகளையும் ஏற்றிச் செல்வதாக தெரிவித்தனர்.

இதை அடுத்து லொறி தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்பட்டது. சிறிது நேரத்தின்பின் லொறியில் இருந்து விழுந்த மாட்டு சாணம் ஒன்றில் துப்பாக்கிரவை ஒன்று கிடந்தது காணப்பட்டது. உசாரடைந்த இராணுவத்தினர் பல முகாம்களுக்கு தகவல் தெரிவித்தும் லொறியும் அதில் சென்றவர்களும் அகப்படவில்லை.

இராணுவ புலனாய்வுத்துறையினர் விசாரணை செய்ததில் இக்கும்பல் வெட்டப்பட்ட மாட்டின் வயிற்றுப் பகுதியில் குண்டுகளையும் தோட்டாக்களையும் மறைத்தும் உயிருடன் கொண்டு செல்லப்படும் மாடுகளின் மல வாயினுள் தோட்டாக்களை திணித்தும் கடத்திலந்துள்ளது தெரியவந்தது.

## முதலாம் தவணைப்பரீட்சை பொதுப் பரீட்சையாக இராது

(வடமராட்சி)

பருத்தித்துறை கல்விக் கோட்டத்தில் முதலாம் தவணைப் பரீட்சை பொதுப்பரீட்சையாக நடைபெறமாட்டாது. பாடசாலை மட்டத்தில் ஆசிரியர்கள் தாமவன் மையை மேம்படுத்துவதற்கான பரீட்சையாக நடாத்தப்படுகிறது.

இக்கோட்டத்திலுள்ள சகல வகுப்புக்களிலும் இம் மாதம் 28ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு அடுத்த மாதம் 4-ம் திகதி முடிவடையும். இப்பரீட்சையின் போது 30-ம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு அனைபூபதி பொது அறிவுத் தேர்வு ஒன்றும் நடைபெறுமென பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. வி. ரி. செல்வரத்னம் தெரிவித்தார். (மோ)

கல்லூரியில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்பட்ட மனையியல் டிப்ளோமா

மானி அறிவித்தலையும் எமது அலுவலகத்தில் பார்வையிடலாம்.

மலேரியாவைப் பரப்பும்

## நுளம்பின் குடம்பிகளை அழிக்கவல்ல மீனினம்

(யாழ்ப்பாணம்)

வவுனிக்குளத்தில் காணப்படும் ஒரு வகையான மீனினம் மலேரியா நோயைப்பரப்பும் அனோபிலிஸ நுளம்பின் குடம்பிகளை உண்டு அழிக்கக் கூடியது எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இம் மீனினத்தை யாழ். குடாநாட்டிற்கு எடுத்து வந்து குறிப்பிட்ட நுளம்பின் குடம்பிகளை அழிக்க வைப்பதற்கு ஈடுபடுத்தப்பட இருப்பதாக விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுசம்பந்தமான ஆராய்ச்சி தற்போது மேற்கொள்வதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக மலேரியா தடுப்பு வாரம் மேற்கொள்ளப்படும் நாட்களில் இந்த மீனின் செயற்பாடுகள் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நீண்டகாலமாக நீர் தேங்கியுள்ள இடங்களான இடங்குகள், கிணறுகள், குட்டைகள் ஆகியவற்றில் இம் மீன் போடப்பட்டு நுளம்பும் பெருக்கத்தைத் தடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, குடிநீருக்காக பயன்படுத்தப்படும் கிணறுகளில் கூட இந்த நுளம்பின் குடம்பிகள் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (தி, ச)

## 9-ம் ஆண்டு நினைவஞ்சலி

### துரைசிங்கம் சரவணன் துரை

(பழைய மாணவன்-
அச்சுவேலி மகாவித்தியாலயம்)

| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 27-04-1971 | 13-03-1985 |

கொஞ்சுமொழிபேசிக் குலாவித் திரிகையிலே
பிஞ்சுவயதிலெம்மைப் பிரிந்துமே சென்றதெங்கே
நெஞ்சில் இனிக்கும் உந்தன்நினைவலைகள் நீண்டுவர
கண்டுமகிழ்வதெப்போ காலமெல்லாம்
கலங்கின்றோம்

அம்மா, அப்பா, அம்மம்மா,
பெரியம்மா குடும்பத்தினர்.

நாவற்காடு,
அச்சுவேலி.
(7694)

## வேலணை - ஊர்காவற்றுறை

# கோட்டங்களுக்கிடையிலான உடற்பயிற்சி போட்டி முடிவு

(யாழ்ப்பாணம்)

இம் மாதம் 5-ம் திகதியாழ் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற வேலணை ஊர்காவற்றுறை கோட்டங்களின் பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டிகளின் முடிவுகள் பின் வருமாறு:-

வேலணைக்கோட்டம்

15 வயது ஆண்கள் பிரிவு:-

1-ம் இடம் - சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம், 2-ம் இடம்-புங்குடுதீவு கணேச மகாவித்தியாலயம், 3-ம்இடம் வேலணை சைவப்பிரகாசவித்தியாலயம்.

17 வயது ஆண்கள் பிரிவு:-

1-ம் இடம் - வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம் 2-ம் இடம் - புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம் 3-ம் இடம் - வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மகாவித்தியாலயம்

19 வயது ஆண்கள் பிரிவு:-

1-ம் இடம் - வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மகாவித்தியாலயம், 2-ம் இடம் - புங்குடுதீவு மகா வித்தியாலயம்,

15 வயது பெண்கள் பிரிவு:-

1-ம் இடம் - வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம் 2-ம் இடம் - வேலணை வைத்திலிங்கம் துரைச்சாமி மகா வித்தியாலயம், 3-ம் இடம்-புங்குடுதீவு சுப்ரமணியமகளிர் மகா வித்தியாலயம்.

17 வயது பெண்கள் பிரிவு:-

1-ம் இடம் - வேலணை வைத்திலிங்கம் துரைச்சாமி மகாவித்தியாலயம். 2-ம்இடம் சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம், 3-ம் இடம் - அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்.

19 வயது பெண்கள் பிரிவு:-

1-ம் இடம் - மண்டைதீவு மகாவித்தியாலயம், 2-ம்இடம் புங்குடுதீவு மகாவித்தியாலயம்-

ஊர்காவற்றுறைக் கோட்டம்

15 வயது ஆண்கள் பிரிவு:

1-ம் இடம் - தம்பாட்டி அ. த. க. பாடசாலை 2-ம் இடம் - காரை- யாழ்ற்ரன் கல்லூரி, 3-ம் இடம்- காரை- தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம்;

17 வயது ஆண்கள் பிரிவு:

1-ம் இடம்- ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி;

19 வயது ஆண்கள் பிரிவு:

1-ம் இடம்- காரை- தியாகராஜா மத்திய மகாவித்தியாலயம்;

15 வயது பெண்கள் பிரிவு:

1-ம் இடம் - கரம்பன் இறிய புஸ்ப மகளிர் வித்தியாலயம், 2-ம் இடம் - காரை- தியாகராஜா ம. ம. வித்தியாலயம் 3-ம் இடம் - காரை - யாழ்ற்ரன் கல்லூரி.

17 வயது பெண்கள் பிரிவு:

1-ம் இடம் - கரம்பன் சண்முகநாதன் மகாவித்தியாலயம், 2-ம் இடம்- நாரந்தனை கணேச வித்தியாலயம், 3-ம் இடம் - காரை - யாழ்ற்ரன் கல்லூரி.

19 வயது பெண்கள் பிரிவு:

1ம் இடம்- காரை - யாழ்ற்ரன் கல்லூரி (22)

# வவுனியா வடபகுதியின் கொங்கொங்காக மாறுகிறது

## ஹட்டன் நஷனல் வங்கி மணிப்பாளர்

(வவுனியா)

வடக்கு -கிழக்கில் நடைபெறும் யுத்தம் மற்றும் உயிரிழப்புகள் அரச வளங்களுக்குப் பெரும் நஷ்டமாகும். இவ்வாறு ஹட்டன் நஷனல் வங்கி நிர்வாகப்பணிப்பாளர் றென்சிரி, விஜேதிலக்கா வவுனியாவில் செய்தியாளர் மத்தியில் பேசும்போது கூறினார்.

நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் வடக்கு-கிழக்கு யுத்தம் தடையாக உள்ளது.வவுனியா இப்போது வடபகுதியில் ஹொங் ஹொங் ஆக மாறியுள்ளது: யாழ் குடாநாட்டுக்கும் வடக்கு-கிழக்கில் ஏனைய பகுதிகளுக்கும் வவுனியாவிலிருந்து தான் பொருள் விநியோகம் இடம்பெறுகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## சிறுகதை தொகுப்பு வெளியிடும்

# யாழ். பிரதேச செயலக தீர்மானம் நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புகள் அடங்கிய சிறுகதை தொகுப்பு ஒன்று வெளியிட யாழ் பிரதேச செயலகம் எடுத்த முடிவை வடக்கு -கிழக்கு மாகாணசபை நிராகரித்து விட்டதாக தெரிவிக்கப்பட்டது.

ஈழத்து படைப்பாளிகளின் தரமான ஐம்பது சிறுகதைகளை தொகுத்து வெளியிட மேற்படி பிரதேச செயலகம் முடிவெடுத்து இதற்குரிய செலவுப் பணமாக ஒரு லட்சம் ரூபா கோரியிருந்தது.

பிரதேச செயலகத்தின் இம்முடிவை 'தேவையற்ற தொன்று' எனக்கூறி வடக்கு கிழக்கு மாகாணசபை நிராகரித்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டது (தி)(ச)

## தற்கொலை முயற்சி

(யாழ்ப்பாணம்)

அயலவருடன் வாய்த்தகராறு முற்றியதில் மனமுடைந்த பெண்ணொருவர் தனக்குத்தானே மண்ணெண்ணெயைஊற்றிதீமூட்டினார்.

# மேய்ப்புப்பணி ஒருங்கிணைப்பு மாநாட்டில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கத்தோலிக்க ... ஆலய மேய்ப்புப்பணிச் சபை, பங்கு மேய்ப்புப்பணிச் ... நிலையமும், பிரத்தியேக குருவும் ஆயர் அவர்களால் ...

## மெய்வன்மைப் போட்டி

(வடமராட்சி)

நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டி (இன்று) பாடசாலை அதிபர் திரு. வ. கணேசமூர்த்தி தலைமையில் பிற்பகல் 2-00 மணிக்கு நடைபெறும்.

பிரதம விருந்தினராக கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரி திரு. சி. சிவராசா கலந்து கொள்வார்.

# நடுத்தெருவில் கைவிடப்பட்ட ஐ. ஐ. தே. முன்னணி

## - பி. பி. சி. விமர்சனம்

(கொழும்பு)

சிறிலங்காவின் அரசியலில் மூன்றாவது அரசியல் கட்சியாக இருந்த ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தற்போது நடுத்தெருவில் விடப்பட்டதற்கு சமனான நிலையை அடைந்துள்ளதாக பி. பி. சி. சந்தேசிய செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

தென்மாகாணசபைதேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியில் காமினியின் பிரவேசத்தை தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சி புனரமைக்கப்படுகிறுப்பதால் இப்படியான ஓர்நிலை ஏற்பட்டுள்ளது: ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா இன்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் உறுப்பினர் சிலரை ஐக்கிய தேசிய கட்சியில்சேர்க்க இருப்பதாகசிங்கள பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டது;

இதற்கான காரணம் ஐக்கிய தேசிய கட்சியும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது என உலகுக்கு காட்டவே இந்த முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது: இதில் ஜனாதிபதி,பிரதமர், அமைச்சர் சிறிசேன கூரே, காமினி திசநாயக்கா, எம்.எச். அமரசிரியின் வாழ்த்துச் செய்திகளும் இப் பத்திரிகை விளம்பரத்தில் உள்ளதாகவும், இது ஏனைய கட்சி அங்கத்தவர்களைப் பீதியுறச் செய்யும் விடயம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இன்றைய நிகழ்வுகள்

(தென்மராட்சி)

முன்னாள் சாவகச்சேரி நகரசபை விசேட ஆணையாளர் திரு. த. நவரத்தினராசா அவர்களுக்கு தென்மராட்சி இந்து-இளைஞர் ஒன்றியத்தின் ஐந்து ஆண்டு நிறைவின் அதியுயர் விருது வழங்கலும் பாராட்டு விழா வைபவமும் இன்று காலை 8. 30 மணிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்ற மண்டபத்தில் தென்மராட்சி இந்து இளைஞர் ஒன்றியத்தின் தலைவர் பிரம்மஸ்ரீ இரா. சத்தியானந்த சர்மா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் யாழ். அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு சு. டிவகலாலா: யாழ் மாவட்ட கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் திரு அன்பரசன், நல்லை ஆதீன முதல்வர், தென்மராட்சி பிரதேச செயலர் திரு பு சுந்தரம்பிள்ளை, தென்மராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு வீமன், சாவகச்சேரி நகரசபை செயலர் திரு கி. நடராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். கௌரவ விருதினை நல்லை ஆதீன முதல்வர் வழங்குவார். (86)

ஃ ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மகளிர் குழு நடாத்தும் 'அனைத்துலக பெண்கள் தின விழா' இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் மாவட்ட மகளிர் குழுத்தலைவி திருமதி கு. சிவராஜா தலைமையில் நடைபெறும். இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ச. ஜெயராஜா பிரதம விருந்தினராகவும், கூட்டுறவுசபைத் தலைவர் திரு வை. செந்திநாதன், யாழ். பிரதேச செயலர் திரு க. குணராசா, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களான திரு செ. லிங்கநாதன், திரு. கே. பஞ்சலிங்கம், திரு ரி. சபாரெத்ணம், திரு எம் கனகசபை, திரு எஸ். ஜெயபாலன், விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் யாழ் மாவட்ட பொறுப்பாளர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வார்கள், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (22)

ஃ ஃ ஃ

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட இந்து சமயப் பேரவையின் விசேட ஆட்சிக் குழுக் கூட்டம் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு பேரவைத் தலைவர் ஆத்ம ஜோதி திரு. நா. முத்தையா தலைமையில் நல்லை ஆதீனத்தில் நடைபெறும். (24)

ஃ ஃ ஃ

(வடமராட்சி)

வட இந்து மகளிர் கல்லூரியிலும், வல்வெட்டித்துறை மகளிர் கல்லூரியிலும் சிறுவர் நாடகம் நடைபெறவுள்ளது.

சிறுவர்களிடம் நாடக ஊக்குவிப்பை உண்டு பண்ணும் நோக்கில் பல்கலைக் கழக மாணவர்களால் சிறுவர் நாடகம் நடாத்தப்படுகிறது.

வட இந்து மகளிர் கல்லூரியில் காலை 10 மணி முதல் 12 மணி வரையிலும் வல்வெட்டித்துறை மகளிர் கல்லூரியில் பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரையிலும் இந் நாடக நிகழ்வுகள் இடம் பெறும். (யோ)

ஃ ஃ ஃ

(வடமராட்சி)

பொலிகண்டி அ. மி. த. க. ...

## வெள்ளத்தால் பாதிப்புற்ற

# அரச ஊழியர்களுக்கு சம். முற்பணம் வழங்கப்படும்

(கொழும்பு)

கடந்த டிசம்பர் இறுதியில் வடக்கு, வடமத்தி, வடமேல் மாகாணங்களில் பெய்த கடும் மழை, வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட அல்லது சொத்துக்களை இழந்த அரசாங்க ஊழியர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள முற்பணம் வழங்குவதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது

இந்தச் சம்பள முற்பணம் பத்து தவணைகளில் திருப்பிச் செலுத்தப் படவேண்டும். இந்தப் பணம் சமயா சமய, தற்காலிக ஊழியர்களுக்கும் வழங்கப்படும்; அவர்களுக்கு நிரந்தர ஊழியர்கள் பிணை நிற்க வேண்டும்; வெள்ளம், மழையினால் பாதிக்கப்பட்டார்என அதிகாரிகள் திருப்தி அடைந்தால் மட்டுமே இப் பணம் வழங்கப்படும்;

இப்பணம் வழங்குவது சம்பந்தமான சுற்றறிக்கை ஒன்றை பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் வை. பி. புஸ்ஸதெனியா அமைச்சுகளின் செயலாளர்களுக்கும், இலாகாக்களின் அதிபர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்

## தேர்தல் காலத்தில் வன்முறை ஏற்படலாம்

# பொலிசாரின் விடுமுறைகள் 10 தினங்களுக்கு நிறுத்தம்

(கொழும்பு)

எதிர்வரும் 24-ம் திகதி நடைபெறவுள்ள தென்மாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு எதிர்வரும் 18 ம் திகதி முதல் 28-ம் திகதிவரை சகல பொலிசாரினதும் விடுமுறைகள் நிறுத்தம் செய்யப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது;

தென்மாகாண சபைத் தேர்தல் காலத்தில் தென்னிலங்கையில் வன்முறைகள் ஏற்படலாம் என்ற அச்சம் காரணமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## தேவை

(யாழ்ப்பாணம்)

அயலவருடன் வாய்த்தகராறு முற்றியதில் மனமுடைந்த பெண்ணொருவர் தனக்குத்தானே மண்ணெண்ணெயை ஊற்றித் தீமூட்டினார்.

இச்சம்பவம் நேற்று யாழ்ப்பாணப்பகுதியில் உள்ள யாழ். மினி என்ற இடத்தில் நடந்தது. இச் சம்பவத்தின் போது கௌரி அம்மா (வயது 42) என்னும் பெண்ணே தனக்குத்தானே தீமூட்டியவராவார். இவர் தீக்காயங்களுக்குள்ளான நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(கி) (ச)

# மாநாட்டில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கத்தோலிக்க திருச்சபையின் மேய்ப்புப் பணி மாநாட்டின் நான்காவது நாள் அமர்வின் போது திருச்சபை அமைப்புகளின் தன்மையும், சேவை நோக்கும் தலத் திருச்சபையின் ஆணைக் குழுக்களும் அவற்றின் நிறுவனங்களும், மறை மாவட்ட மேய்ப்புப் பணியின் ஒருங்கிணைப்பு அமைப்பு முறை என்பன ஆராயப்பட்டன.

ஆலய மேய்ப்புப் பணிச்சபை, பங்கு மேய்ப்புப்பணிச்சபை, மறைகோட்ட மேய்ப்புப் பணிச்சபை, மறை மாவட்ட மேய்ப்புப் பணிச் சபை முதலிய அமைப்புகளின் பல தரப்பட்ட பணிகளும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. தமது சொந்தப் பிரதேசங்களை விட்டு இடம் பெயர்ந்த மக்களின் தனித்துவம் மதிக்கப்பட்டு அவர்களது நலன்கள் பேணப்பட வேண்டும் என்றும், அவர்களுக்கென ஒரு தொடர்புப் பணி நிலையமும், பிரத்தியேக குருவும் ஆயர் அவர்களால் நியமிக்கப்பட வேண்டும் என்றும் ஒரு கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

சம காலத்தில் புதிய தேவைகள் எழுகின்றபடியால் பல்வேறு புதிய பணிகளில் ஈடுபட அதிக பணியாளர்கள் தேவைப்படுவதால் எவ்வித தயக்கமுமின்றி புதிய பணிச்சபைகள் மறை மாவட்டத்தில் வரவேற்கப்பட வேண்டும் என்றும் அபிப்பிராயம் நிலவியது.

விவசாயபீடத்திற்கு

# விவசாய உத்தியோகத்தர் மாணவராகத் தெரிவு

யாழ் பல்கலைக்கழக, கிளிநொச்சி விவசாய பீடத்திற்கு விவசாய உத்தியோகத்தர்களில் இருவரை மாத்திரம் உள்வாரி மாணவர்களுடன் இணைத்துக் கொள்ள பல்கலைக்கழக நிர்வாகத்துக்கும் மாணவர்களுக்கும் இடையில் உடன்பாடு ஏற்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

மேற்படி பீடத்திற்கு, இருபது விவசாய உத்தியோகத்தர்கள் வரை உள்வாரி மாணவர்களுடன் இணைப்பதற்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அனுமதி அளித்திருந்தும் மேற்படி பீட மாணவர்கள் நடாத்திய பகிஷ்கரிப்புகளினால் இம்முடிவு பின் தள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது. வேறு பல்கலைக்கழகங்களிலும் இவ்வாறு விவசாய உத்தியோகத்தர்களை பட்டப்படிப்புக்கு உள்வாரிமாணவர்களுடன் இணைத்து கற்பிக்கப்படுவதும் இங்கு கவனிக்கத்தக்கது.

மேலும் கிளிநொச்சி விவசாய பீடத்திற்கு தெரிவு செய்யப்படவிருக்கும் இரு விண்ணப்பதாரிகளுக்கும் எதிர்வரும் கல்வியாண்டிலிருந்தே இடமளிக்கப்படக் கூடும் எனவும் தெரிய வருகின்றது.

(9,11)


## பகவான்

## ஆங்கில மருத்துவ சேவை

14-3-94 முதல் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (டாக்டர் சண்முகலிங்கம் வீட்டிற்கு சற்று முன்பாக) என்ற முகவரியில் மேற்படி சேவை இரு நேரமும் இயங்கவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

நிர்வாகம்.

பகவான் மருந்தகம்,
221, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-8825]


# உற்பத்தி எழுச்சி வாரம் பொ.மே. நிறுவன ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் உற்பத்தி எழுச்சி வாரத்தை அடுத்த மாதபிற்பகுதியில் மிக எழுச்சியுடன் நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

உழைக்கும் மக்களே இம்மண்ணின் உயிர்நாடிகள் என்பதால் இவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து உற்சாகப்படுத்தும் நோக்குடன் தமிழீழத்தின் பெரும்பாலான மாவட்டங்களிலும் வட்டாரீதியாக வருடாந்தப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்படுவது தெரிந்ததே.

இந்த உற்பத்தி எழுச்சி வாரத்தின் போது நீச்சல், பாய்மரம் ஓட்டுதல், துடுப்பு வலித்தல், வலை பின்னுதல், துலா மிதித்தல், மாட்டு வண்டிச்சவாரி, நிலம் உழுதல், நிலம் கொத்துதல், புதிய வகை உணவு தயாரித்தல், பனைமரம் ஏறுதல், கைப்பணி, சிறுகைத் தொழில், பதநீர் உற்பத்தி, வீட்டுத்தோட்டம் அமைத்தல், நல்லின ஆடுமாடு வளர்த்தல், பொது அறிவு, குளம் புனரமைப்பு, வாய்க்கால் திருத்துதல், வீதி திருத்துதல் ஆகிய துறைகளில் போட்டிகள் நடத்தப்படவுள்ளது.

அத்துடன் இம்முறை நிலமற்ற, வசதியற்ற ஆனாக்க ஊக்கமுடைய குடும்பங்களுக்கு கிராமிய உற்பத்திக்குழுக்கள் மூலம் தரிசாககிடக்கும் விவசாயக் காணிகள் தற்காலிக அடிப்படையில் பயன்படுத்த வழங்கப்படவுள்ளது.

இந்த எழுச்சிவாரப் போட்டியில் பங்கு பெற விரும்புவோர் எதிர்வரும் முதலாம் திகதிக்கு விண்ணப்பங்களை உரிய படிவங்கள் மூலம் அனுப்பவேண்டும் எனவும், போட்டியில் வெற்றி பெறுவோர்களுக்கு தங்கப்பதக்கம், கேடயம் போன்ற பெறுமதியான பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களும் மே தினக் கூட்டத்தில் வைத்து வழங்கப் பட இருப்பது குறிப்பிடத்தக்கது.

# இரவு நேர கலிபர் தாக்கு

தொண்டமனாறு குடியிருப்பு பகுதிகள் மீது நேற்று முன்தினம் இரவு சிறிலங்கா உலங்கு வானூர்தி ஒன்று சில மணி நேரம் பரவலாக தொடர்ந்து துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்தது.

பலாலி முகாமில் இருந்து விரைந்து வந்த இவ்விமானம் இரவு 9-00 மணியளவில் சரமாரியாகச் சுட்டது. மற்றும் நேற்று காலை 8-30 மணியளவில் தொண்டமனாறு வல்லை பகுதிகள்மீது உலங்கு வானூர்தி வட்டமிட்டு நோட்டமிட்டது. (யோ)

முதல் 4 மணி வரையிலும் இந் நாடக நிகழ்வுகள் இடம் பெறும். (யோ)

ஃ ஃ ஃ

(வடமராட்சி)

பொலிகண்டி அ. மி. த. க. பாடசாலை அபிவிருத்தி பழைய மாணவர் சங்கத்தினரால் மாபெரும் நாடக விழா இன்று பொலிகண்டி விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகும்.

இந் நாடகவிழாவின் போது கற்பூரதீபம், புது விடியலை நோக்கி, துரோகத்தின் சின்னங்கள் ஆகிய நாடகங்கள் காண்பிக்கப்படும்.

(யோ)

ஃ ஃ ஃ

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் எட்டாவது நினைவு தினம் இன்றாகும்.

ஃ ஃ ஃ

வயாவிளான் குட்டியப்புலம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் இரண்டு மணியளவில் புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. அதிபர் சி. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு சி. வேலாயுதம் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். திரு எஸ். இரட்ணராசா திரு. ஐ மனோகரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், திரு. இளம்பரிதி, திரு. அருண் மாஸ்டர், செல்வி பைரவி' திரு செழியன். ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## ஜப்பான் மருந்து உதவி

(கொழும்பு)


இந்த வருடத்திற்கான மூளைக்காய்ச்சல் தடுப்பு ஊசி மருந்து ஏற்றும் திட்டத்திற்கென ஜப்பான் அரசாங்கம் மூன்று கோடி ரூபா பெறுமதியான ஊசி மருந்துகளை சுகாதார அமைச்சுக்கு அன்பளிப்பு செய்துள்ளது.


## தேவை

எமது நிறுவனத்தில் பணியாற்றுவதற்கு அச்சுக் கோர்ப்பாளர்களும், பக்கம் கட்டுநர்களும், பத்திரிகைத் தாள்கள் வெட்டுவது மற்றும் மடிப்பது போன்ற பணிகளை ஆற்றக் கூடியவர்களும் தேவைப்படுகின்றனர். தகுதியானவர்கள் நாளை திங்கட்கிழமை காலை பத்து மணியளவில் அலுவலகத்திற்கு நேரில் சமுகம் தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம். ஈழநாதம்


## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு:
13 - 10 - 1968

இறப்பு:
11 - 03 - 1994

### கந்தசாமி ஜெபிச்சந்திரன் (ஜெபி)

(செயலாளர் -
வண் - வடகிழக்கு கொண்டலடி விநாயகர் ஆலயம்)

சேவை செய்யவே
நீ -
சுவாசித்தாய்
மரணம்
உன் சுவாசத்தை
திருடிவிட்டது!
உன் ஆன்மீகத் தொண்டு எம்மை
ஆச்சரியப்பட வைத்ததுண்டு!

உங்கள் பிரிவால் துயருறும்
யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வடகிழக்கு
கொண்டலடி விநாயகர் ஆலய
நிர்வாகசபை, தொண்டர்சபை
உறுப்பினர்கள்

(7727)

## சிந்தனைக்கு

பகிர்ந்து பிறரிடம் பரப்புவதற்கு கொடுக்கப்பட்டதே அறிவு. இந்த அரியபணியின் அழகு மறைந்துவைப்பதில் பறிபோகும்

- ஜோஸப் ஹால்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 13-03-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05

## படைப்பாளிகளும் வரலாற்றுக் கடமையும்

"அரச அடக்கு முறையின் அழுத்தங்கள் அனைத்தையும் எமது மக்களே தாங்கி நிற்கின்றார்கள்; போராட்டத்தின் பெரும் பளுவையும் அவர்களே சுமந்து நிற்கின்றார்கள்; எத்தனையோ அவலங்கள் துன்பங்கள் மத்தியிலும் தளராத உறுதியுடன் துணிந்து நிற்கின்றார்கள். எமது மக்களின் போர்க்கால வாழ்வனுபவங்களை கலை, இலக்கிய வடிவங்களாகச் சித்திரிக்கவேண்டும். இந்தவகையில்தான் கலை இலக்கியங்கள் காலத்தின் பதிவைச் செய்து கொள்ள வேண்டும்"

தலைவர் பிரபாகரன் முல்லை மாவட்ட நாடக இசைக் கலைஞர்கள் மத்தியில் விடுத்துள்ள இக் கோரிக்கையானது தனியாக அவர்களுக்கு மட்டுமானதல்ல; தமிழீழக் கலைஞர்கள் அனைவருக்குமானதென்றே கொள்ளவேண்டும்; ஏனெனில், ஒரு காலத்தின் பதிவுகளின் முக்கியத்துவம், நிகழ்காலத்தில் புரியாதுவிட்டாலும் எதிர்காலத்திலேயே அவற்றின் அவசியம் புரியக்கூடியதாகும்.

தமிழ் மக்களின் இன்றைய வாழ்வனுபவமானது மிகவும் முக்கியமானது. துன்பங்கள், துயரங்கள் நிறைந்ததானாலும், வீரமும், சாதனைகளும், மாற்றங்களையும் நிறையவே கொண்ட காலமாகும், தமிழ்தேசிய இனத்தால் ஒரு வரலாறு படைக்கப்பட்டுக்கொண்டிருக்கும் இக்காலப் பகுதியில் அவற்றின் பதிவுகள் இடம் பெறாது போகுமானால் அது பெரும் வரலாற்றுத் தவறாகும்

தமிழீழ மண்ணின் இன்றையபோர்க்கால அனுபவங்களுடன் கூடிய பல புதிய கலை இலக்கிய வடிவங்கள் பலவடிவங்களில்வெளிவந்துள்ளமை மறுக்கமுடியாதது. எழுத்திலக்கியங்களில் இருந்து ஒலி, ஒளி நாடாக்கள் எனவும், வேறும், பல கலை வடிவங்களும் உருவாகியுள்ளன. இவ்வளர்ச்சி குறித்து ஓரளவுக்கு நாம் மகிழ்ச்சி கொள்ளவும் முடியும்.

# சிறிலங்கா அரசியலில் மூன்றாவது அணியின் அரசியல் எதிர்காலம் என்ன?

## தென் மாகாணசபை தேர்தல் முடிவுகள் தீர்மானிக்கும்

காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களை உள்ளடக்கிய தென் மாகாண சபைக்கு எதிர்வரும் 24ஆம் திகதியன்று நடைபெற இருக்கும் தேர்தலானது தென்னிலங்கையின் அரசியற்களத்தில் மிகுந்த முக்கியத்துவம் உடையதாகும். சிறிலங்காவின் எதிர்கால தேர்தல்களுக்கு கட்டியம் கூறுவதாகவும், தென்பகுதி மக்களின் விருப்பு வெறுப்புக்களை பிரதிபலிப்பதாகவும் அமையும் என்றெல்லாம் அவதானிகளால் கருதப்படுகின்றது. எனினும் இவையெல்லாவற்றையும் விட ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி என்ற கட்சியின் எதிர்காலம் பற்றி இத் தேர்தல் முடிவு செய்யும் என்பது மிகவும் சுவாரஸ்யம் மிக்கதாகும்.

ஐ தே. கவிலிருந்து வெளியேற்றப்பட்ட லலித் அத்துலத்முதலியினாலும் அவரது சகாக்களாலும் தோற்றுவிக்கப்பட்ட ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி லலித் மற்றும்பிரேமதாசாவின்கொலைகளை அடுத்து மூன்று பிரிவுகளாகச் சிதறியது. இப் பிரிவுகளில் எந்தக் குழுவினர் மீது மக்கள் எந்தளவுக்கு நம்பிக்கை கொண்டுள்ளனர் என்பதை இத்தேர்தலின் வாக்குப் பதிவுகள் சுட்டிக் காட்டும் கடந்த மாகாணசபைத் தேர்தலின்போது ஜனநாயக ஐகிய தேசிய முன்னணி பெற்ற வாக்குகளை விட இம்முறை அதிகமாகப் பெறுமா இல்லையா என்பது ஒருபுறமிருக்க - காமினி திசாநாயக்க, திருமதி சிறிமானி லலித் அத்துலத் முதலி, மற்றும் வடமேல் மாகாண முதல்வர் ஜீ. எம். பிரேமச்சந்திரா ஆகியோரில் மக்கள் செல்வாக்கு யாருக்கு அதிகம் என்பதை அறியும் உரைகல்லாக இத் தேர்தல் முடிவுகள் விளங்கப் போகிறது லலித் மற்றும் பிரேமதாசவின் மரணங்களைத் தொடர்ந்து இடம் பெற்ற மாகாண சபை தேர்தலின்போது ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி பெற்ற வாக்குகளை சுட்டிக் காட்டுவது இங்கு பொருத்தப்பாடானதே.

இரு பெரும் பிரிவுகளாக பிரிந்து தேர்தல் களத்தில் மோதுகின்றன. காமினி திசாநாயக்கா தலைமையில் ஐ தே.கவில் இணைந்துள்ளவர்கள் ஒருபுறமும், திருமதிசிறிமானி அத்துலத்முதலியின் ஆதரவுடன் பொதுஜன ஐக்கிய முன்னணியில் இணைந்துள்ளவர்கள் மறுபுறமுமாக மக்கள் ஆதரவைத் தேடி அலைகின்றனர். இவர்களில் எந்த அணியைச் சேர்ந்தவர்கள் அதிகளவில் வெற்றி பெறப் போகின்றனர் என்பதே இன்றைய சர்ச்சையாகும்.

கடந்த மாகாண சபைத் தேர்தலின்போது ஜ. ஐ தே மு. சார்பில் தெரிவு செய்யப்பட்ட நால்வர் இப்போது பொதுஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளர்களாக உள்ளனர். தென் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவரும் முன்னைய தேர்தலில் தெரிவு செய்யப்படாத வேட்பாளர்இருவரும் மேலும் இருவருமாக ஜ ஐ தே முவின் மொத்தம் ஐவர் ஐ தே கவின் வேட்பாளர்களாக உள்ளனர். மொத்தம் 53 உறுப்பினர்களைக் கொண்ட இம் மாகாண சபைக்கு ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த ஒன்பது வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

### மூன்றாவது சக்தியாக மிளிர்ந்த ஜ ஐ.தே மு.

வடக்கு, கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களிலும் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தல்களில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி 14 54விகிதமான வாக்குகளை பெற்று முக்கியமான மூன்றாவது சக்தியாக தோற்றம் பெற்றது. இந்த நிலையில் ஜ ஐ தே. முவின் முக்கிய உறுப்பினர்களைத் தமது பக்கம் வென்றெடுப்பதில் ஆளும் ஐ. தே,கவின் தலைமை தீவிர அக்கறை காட்டியது. காமினி திசாநாயக்காவை தம் வசப்படுத்திக்கொண்ட ஐ. தே கவினர், அவரைப் பயன்படுத்தி வருகின்றனர். பிரேமதாசா இல்லாதஐ. தே' கவும், லலித் இல்லாத ஜ ஐ தே மு வும் தோழமைக் கட்சிகளாகச் தே- முவைச் சேர்ந்திருந்த பலருக்கு ஐ- தே- க- உறுப்பினர் பதவியும், கட்சிக் கிளைகளின் நிர்வாகப் பதவிகளும் வழங்கப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது- இதற்காக

ஏற்பாடு செய்யப்பட்ட வைபவத்தில்ஜனாதிபதிடி. பி. விஜேதுங்காவுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கட்சியின் பொதுச்செயலரும் அமைச்சருமான சிறிசேன குரே ஆகியோரும் காமினி திசாநாயக்கவும் தென் மாகாணத்தின் முன்னாள் முதல்வர் எம். எஸ். அமரசிறியும் கலந்துகொள்ள இருக்கின்றனர்-

### விஜேதுங்காவின் நம்பிக்கையும் ரணிலின் கருத்தும்

இதே வேளை ஐ.தே.கவின் பிரசாரக் கூட்டங்களில் காமினி திசாநாயக்க முன்னணிப் பாத்திரம் வகிப்பதை ரணில் விரும்பவில்லை. எனவே தென்மாகாணத்தேர்தல் பிரசாரத்தில் காமினி திசாநாயக்க கலந்துகொள்வதை தவிர்க்குமாறு ஐ தே. க வேட்பாளர்களுக்கும், மற்றும் அமைச்சர்களுக்கும் பிரதமர் ரணில் உத்தியோகப்பற்றற்ற முறையில் வேண்டுகோள் விடுத்துள்ளார். ஐ.தேகவை விட்டு விலகிச் சென்றவர்களுக்கு இடமளிக்கப்படக்கூடாது என்பதும், கட்சியைக் காட்டிக் கொடுத்த இவர்கள் பதவிக்காக எதையும் செய்வார்கள் என்பதும். ஐ தே. கவின் தேர்தல் பிரசாரத்தில் காமினி அதிகளவில் ஈடுபட்டால் ஐ தே. க விழுக்காட்டைச் சந்திக்கும் என்பதும் ரணிலின் கருத்தாக இருப்பதாகக் கூறப்படுகிறது- எனினும் காமினி திசாநாயக்க தேர்தல் பிரசாரக் கூட்டங்களுக்கு கட்டாயம் அழைக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி டி. பி விஜேதுங்கா வலியுறுத்துகிறார். இதன்மூலம் ஜ ஐ தே-முவின் கணிசமான வாக்குகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதும், தென் மாகாணத்திலுள்ள தோட்டத் தொழிலாளர்களின் 12 யிர் ஊட்டிய காமினி திசாநாயக்கவினால் மீண்டும் ஐ தே.கவிற்கு புத்துயிர் ஊட்ட முடியும் என்பது டி.பி விஜேதுங்காவின் நம்பிக்கையாகும். இதனால்தான் ரணில் சிறிசேனகுரே போன்றவர்களை விட காமினி கட்சியின் நலனில் அக்கறை காட்டுவார் எனக் கருதி அவர்களது எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் அவருக்கு உறுப்புரிமை வழங்கப்பட்டதாக விஜேதுங்க தமக்கு நெருக்கமானவர்களிடம் தெரிவித்துள்ளாராம்-மேலும் பொதுச் செயலர் பதவியை வகிக்கும் சிறிசேன குரேயின் பதவிக்கு தற்சமயம் ஆபத்து காத்திருப்பதாகவும், காமினிதிசாநாயக்கவிற்கு கட்சியின் பொதுச்செயலர் பதவியுடன் பாதுகாப்பு அமைச்சர் பதவியும் கிடைக்கலாமெனவும் தற்போது எதிர்பார்க்கப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

### திரிசங்கு சொர்க்கத்தில் வடமேல்மாகாண முதல்வர்

இவை ஒருபுறமிருக்க ஜ. ஐ. தேமுவின் முன்னாள் பொதுச் செயலாளரும், வடமேல் மாகாண முதல்வருமான ஜி. எம். பிரேமச்சந்திரா தென் மாகாணத் தேர்தலில் தான் எந்தவொரு அணியையும் ஆதரிக்கவில்லை எனவும், தமது ஆதரவாளர்கள் தேர்தலில் கலந்துகொள்ள வேண்டாமெனவும் கேட்டுக்கொண்டுள்ளார். ஐ தே.கவில் உறுப்புரிமைபெற விரும்பிய இவரது

#### நிமலராஜன்

எண்ணம் டி. பி. விஜேதுங்காவின் செய்கையினால் ஈடேற முடியாமற்போனதும், இந்த நிலையில் இவர்தொடர்ந்தும் முதல்வராக நீடித்துவருவதும் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியதே. இதேவேளை வடமேல் மாகாணசபையின் ஐ தே க உறுப்பினர்கள் 25 பேரில் 23 பேர் பிரேமச்சந்திர ஐ தே.கவின் எஞ்சிய இரண்டு பேர் சேர்ந்தால் கூட இவரது பதவியைத் தக்கவைத்து விட முடியாது. ஆக இவரது முதலமைச்சர் பதவிஇப்போது ஊசலாடுகிறது எனவும் கணிக்கப் படுகின்றது.

இன்னும் திருமதி சிறிமானி அத்துலத்முதலி ஜ ஐ தே முவின் பொதுசன ஐகிய முன்னணியுடன் இணைந்து போட்டியிடும் வேட்பாளர்களுக்குஆதரவு தேடி காலி, அம்பாந்தோட்டை, மாத்தறை மாவட்டங்களில் களத்தில் இறங்கியுள்ளார். தமது கணவரின் இரத்தத்தில் தோய்ந்த இக்கட்சியை சிலரின் பதவிச் சுகபோகங்களுக்காக விட்டுக்கொடுக்கப்போவதில்லை என்றும், ஐ.தே,கவின் கைப்பொம்மையாக ஜ.ஐ.தே,முவை மாற்ற ஒருபோதும் இடம் கொடுக்கப்போவதில்லை என்றும் அவர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்: எனவே உண்மையான கட்சி தமதே என்றும், மக்கள் அதற்கேவாக்களிக்க வேண்டும் என்றும் அவர் பிரசாரங்களில்கூறிவருகிறார்- அத்துடன் ஜ-ஐ-தே. முவின் தலைவர் ஏ சீ.குணரட்னா ஜனவரி 4ஆம்திகதி கூடிய கட்சியின் பொதுச் சபைக் கூட்டத்தின்படி தமது கட்சியின் வேட்பாளர்கள் பொதுசன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து போட்டியிடுவதாகவும் மக்கள் அவர்களையே ஆதரிக்கவேண்டுமெனவும் கருத்து வெளியிட்டுவருகின்றார்-

விஜேகுமாரணதுங்க மறைவின் பின்னர் சிறிலங்கா மக்கள் கட்சியில் ஒலி அபய குணசேகர ஐ. தே கவின் பின்னால் செயற்படுவது போல லலித் அத்துலத் முதலி மறைவின் பின் ஜ. ஐ தே. முவில் காமினி திசாநாயக்க தோன்றியிருப்பதாக கூறப்படுகின்றது. மக்கள் கட்சியின் திருமதி சந்திரிக்கா குமாரணதுங்க சுதந்திரக்கட்சியுடன் இணைந்த பொதுசன ஐகிய முன்னணியை உருவாக்கி தனது அரசியல் இருப்பை உறுதிப்படுத்திக் கொண்டுவருகிறார், அதேபோல திருமதி சிறிமானி அத்துலத் முதலியும் செயற்பட்டு வருகின்றார்

யுள்ளன. இவ்வளர்ச்சி குறித்து ஓரளவுக்கு நாம் மகிழ்ச்சி கொள்ளவும் முடியும்.

ஆனால், இன்றைய காலத்தின் நிகழ்வுகளுக்கும், வாழ்வனுபவத்திற்கும் ஏற்ப கலை இலக்கியங்கள் தரத்திலும், தொகையிலும் வெளிவந்துள்ளனவா என்பதில் சில கேள்விகள் இருக்கத்தான் செய்கின்றன; அதாவது தமிழ் மக்களின் மிக முக்கியமான காலகட்டத்தில் அவற்றை முழுமையாகப் பதிவு செய்யப் போதுமானதும், முற்றிலுமாக வெளிக்கொண்டுவரக்கூடியதுமான கலை இலக்கியங்கள் வெளிவந்துள்ளனவா என்பதே கேள்வியாகும்;

இந்த வகையில் தமிழீழ மண்ணிலிருந்து புதிய கலை, இலக்கிய வடிவங்கள் வெளிவருவது போதாது என்றே கூறமுடியும். இதற்கு நாம் வாழும் சூழ் நிலையில் கலை, இலக்கியங்களை பிறப்பாக்கம்செய்ய முடியாது எனக் காரணம் கூற முற்படுவதும் உண்டு; ஆனால், இது ஏற்றுக்கொள்ள முடியாததொன்றாகும். ஏனெனில் உலகில் உருவாகிய பல சிறப்புமிக்க கலை, இலக்கிய வடிவங்களும், பெரும் புகழ்பெற்ற படைப்புக்களும்மோசமான அரசியல் இராணுவச் சூழ்நிலைகள் நிலவிய காலங்களிலேயே உருவாகியதாக வரலாற்றுப் பதிவுகள் காட்டுகின்றன, மார்கியம் கோர்க்கி, பாரதியார் என இதன் பட்டியல் நீடித்துச் செல்லக்கூடியதாகும். இவர்கள் இப் படைப்புக்கள் மூலம் அவர்களது தேசத்திற்கு ஆற்றிய சேவையை உலகமே இன்று பாராட்டுகின்றது.

இந்தவகையில் கலைஞர்களினால் இன்றைய சூழ் நிலையில் ஆற்றவேண்டிய பங்கு நிறையவே உண்டு. தலைவர் பிரபாகரன் குறிப்பிட்டதுபோல் ''கலைஞர்கள் வாழ்க்கையை ஆழமாகப் பார்க்கின்றார்கள்; அவர்களின் பார்வை மிகவும் உன்னிப்பானது, கூர்மையானது. மக்களது வாழ்வையும் போராளிகளினது உணர்வையும் துல்லியமாகச் சித்திரிக்க அவர்களால் முடியும் அத்தகைய படைப்பிலக்கியங்கள் வாயிலாக விடுதலை உணர்வையும், தேசப்பற்றையும் கலைஞர்கள் தட்டி எழுப்ப வேண்டும்.''

இந்த ரீதியில் தேவையுணர்ந்து இக்காலகட்டத்தில் கலை, இலக்கியங்கள் படைக்கத் தவறுபவர்கள் கலைஞர்கள் அல்ல, பச்சோந்திகளே. இவர்கள் நிகழ்காலத்திற்கு தமது பங்களிப்பைச் செய்யவில்லை என்பதோடு,எதிர்காலச் சந்ததிகளுக்கு தமதுகடமையை ஆற்றத் தவறியவர்கள் என்றே கொள்ள முடியும்.

வாக்குகளைச் சுட்டிக் காட்டுவது இங்கு பொருத்தப்பாடானதே.

| | அளிக்கப்பட்ட வாக்குகள் | ஜனநாயக ஐ. தே, மு பெற்றவை | உறுப்பினர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| காலி | 4,57,387 | 39036 | 2 |
| | 73.55,% | 9.08.% | |
| மாத்தறை | 3,45,464 | 44,873 | 2 |
| | 69 92 % | 13 91.% | |
| அம்பாந் | 2,24,089 | 32,882 | 2 |
| தோட்டை | 69 23.% | 15.93.% | 2 |

அதாவது தென் மாகாண சபையில் 1,16,791 வாக்குகளைப் பெற்று ஆறு உறுப்பினர்களை மாகாண சபைக்கு அனுப்பிய இக்கட்சி இன்று

இல்லாதஐ.தே.கவும், லலித் இல்லாத ஐ ஐ தே மு வும் தோழமைக் கட்சிகளாகச் செயற்பட முடியும் என்ற வகையில் அறிக்கைகளும், பிரசாரங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது- இதற்காக காலி மாவட்டத்தில் ஐ- ஐ.

என்பதும், தென் மாகாணத்திலுள்ள தோட்டத் தொழிலாளர்களின் 12 சதவிகித வாக்குகளைப் பெற முடியும் என்பதும் விஜேதுங்காவின் கணிப்பு ஆகும். அத்துடன் ஜே.வி.பியின் நடவடிக்கைகள் உச்சம் பெற்றிருந்த இக்கட்டான காலத்தில் ஐ, தே. கவைக் கட்டிக் காப்பாற்றிய நான்கு பிரதான தூண்களில் காமினி மட்டுமே இன்று அரசியலிலும், ஐ.தே,கவிலும் இருக்கின்றார் என்பதுவிஜேதுங்காவின் எண்ணமாகும், முன்னாள் ஜனாதிபதி, மறைந்த ஜனாதிபதி பிரேமதாசா, மறைந்த லலித் அத்துலத் முதலி ஆகியோருடன் இணைந்து ஐ தே கவிற்கு புத்து

வடமேல் மாகாணசபையின் ஐ.தே.க உறுப்பினர்கள் 25 பேரில் 23பேர் பிரேமச்சந்திர முதல்வர் பதவியில்நீடிப்பதை விரும்பவில்லை என்று மாகாண ஆளுநருக்கும் கட்சியின் பொதுச்செயலருக்கும்எழுத்து மூலம் தெரிவித்து இருப்பதும், இதுதற்போதுஜனாதிபதியின் கவனத்திற்குக்கொண்டுவரப் பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இந்த மாகாணசபையில் உறுப்பினர்களாக இருக்கும் பொதுசன ஐக்கிய முன்னணியின் 18 பேரும் இவருக்கு எதிராகவே வாக்களிப்பர் என்பதும், ஜ ஐ தேமுவின் ஒன்பது பேரில்யார் யார் இவரை ஆதரிப்பர் என்பது தெளிவாக இல்லை என்பதும், இந்த ஒன்பது பேருடன்

சிறிமாலி அத்துலத் முதலியும் செயற்பட்டு வருகின்றார் இந்தப் பரிசோதனையின் வெற்றி தோல்வி தென் மாகாணசபை தேர்தல் முடிவின் மூலம் வெளிப்பட இருக்கிறது

கொலையுண்ட கட்சித் தலைவர்களின் மனைவிமார்களது கண்ணீரா அல்லது தலைவர்களை இழந்த பின்பு பதவிகளை நாடி ஆட்சியாளர்களிடம் சரணாகதி அடைந்தவர்களின் பசப்பு வார்த்தைகளா வெற்றி பெறப்போகிறது என்பது இன்னும் சில நாளில் தெரியவரும்- தென்மாகாண வாக்காளர்கள் இதனைத் தீர்மானிக்க இருக்கின்றனர்.

# இந்திய சிறையில் வெளிநாட்டார் காரணம் இன்றி தடுத்து வைப்பு

'கடுமையான பாதுகாப்பின் கீழ் டிஹார் ஜெயிலில் வைக்கப்பட்டுள்ள பிறநாட்டவர்களுக்கு காரணம்தெரியவில்லை- குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படாது ஐந்து வருடங்களுக்கு மதிகமாக பலர் தடுத்து வைக்கப் பட்டுள்ளார்கள்' என இந்திய சிறையில் தடுத்து வைக்கப் பட்டுள்ள பிறநாட்டவர்கள் கூட்டாக இந்திய ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மாவுக்குச் சமர்ப்பித்த மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

ஐரோப்பிய, ஆபிரிக்க ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது

டிஹார் ஜெயிலிலுள்ள 8000 கைதிகளில் 90வீதமானோர் மீது எத்தகைய குற்றச்சாட்டுக்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவில்லை.

ஜனாதிபதிக்குத் தாக்கல் செய்த மனுவின் பிரதிகள் பிற நாட்டுத் தூதரகங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

சென்ற டிசம்பர் மாதம் பத்து விசேஷ நீதிமன்றங்கள் விசாரணைகளை மேற்கொள்ளுமென இந்திய அரசு அளித்த உறுதி நிறைவேற்றப்படவில்லையெனவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனுவில் கைச்சாத்திட்டவர்களிடையே ஆசியாவில் பல கொலைக் குற்றங்களுக்காகத் தேடப்பட்டுவந்த வியட்நாமில் பிறந்தபிரான்ஸ்வாசி சார்ல்ஸ் சோபராஜின் பெயரும் காணப்பட்டது-

# எண்ணெய்க் கப்பல் துப்பாக்கிமுனையில்கடத்தல்

பல்கேரிய எண்ணெய்த்தாங்கிக் கப்பல் ஒன்று சேர்பியா மீதான ஐ, நா, வர்த்தகத் தடையை மீறி சேர்பியாவிற்குள் நுழைந்துள்ளது. ஆயுதம் தாங்கிய கோஷ்டி ஒன்றினால் கடத்தப்பட்ட இக்கப்பல் சேர்பியா ஊடாக கடந்து செல்ல அனுமதிக்கப்படாது போனால் அது வெடிக்க வைக்கப்படுமென எச்சரிக்கை விடுவிக்கப்பட்டதை அடுத்தே தடையை மீற நேர்ந்ததாக கூறப்படுகிறது.

கப்பல் தளத்தில் காணப்பட்ட இருவர் தம் கையிலிருந்த துப்பாக்கிகளை கப்பல் ஓட்டிகள் ஏழு பேரை வரிசையாக நிறுத்திவிட்டு அவர்கள் மீது குறிவைப்பதை தாம் கண்டதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர், அவர்கள் வெளியாட்களா அல்லது ஏனைய கப்பல் ஓட்டிகளா என்பது தமக்கு தெரியவில்லை எனவும் அவர்கள் கூறினர்.

# மனைவியை உயிரோடு எரித்தவர் கைது

போனசாக வாங்கிய பணத்தை மனைவி தன்னிடம் தரவில்லை என்று ஆத்திரம் அடைந்த கணவன், மனைவியை எரித்து கொலை செய்தாராம் அவரை பொலிசார் கைது செய்தனர்

சென்னையைஅடுத்து அம்பத்தூர் சின்ன அத்திப்பட்டுகிராமத்தைச் சேர்ந்தவர் ரவி (வயது 25) தனியார் கம்பனி ஊழியர் ஏற்கனவே திருமணமான இவர் 28 வயது பெண்கிளியம்மாளை 2வதாக திருமணம் செய்து கொண்டாராம்

கிளியம்மாளும் ஒரு தனியார் கம்பெனியில் வேலை செய்து வந்தார். அங்கு போனஸ் தொகையை முன் கூட்டியே வழங்கியதாகக் கூறப்படுகிறது, ஆனால் அவர் வேலைக்குச் சேர்ந்து 6 மாதமே ஆனதால் போனஸ் தரப்படவில்லையாம். இதை சொன்ன போது ரவி நம்பவில்லை. பணத்தை வாங்கி யாரிடமோ கொடுத்து விட்டு தன்னை ஏமாற்றுவதாககூறி கிளியம்மாளைசந்தேகித்தார்

இது தொடர்பாக அவர்கள் இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டது, சம்பவத்தன்று கிளியம்மாள் மீது மண்ணெண்ணெயை ஊற்றி தீ வைத்துக்கொளுத்தியதாக கூறப்படுகிறது. உடல் கருகிய நிலையில் சென்னைகீழ்ப்பாக்கம் அரசு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்,

அங்கு தீவிர சிகிச்சை அளித்தும் பலன் இன்றி பரிதாபமாக செத்தார்

**வனநாடே வளநாடு**
**அது நிலைக்க வழிகோலு**

# எம். பி. பதவி ராஜினாமாவை அஷ்ரப் ஒத்திவைத்தார்

(கொழும்பு)

மார்ச் 22-ம் திகதியன்று தனது எம்,பி. பதவியிலிருந்து இராஜினாமாச் செய்து கொள்ளப்போவதாக அறிவித்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் அத்திகதியில் தமது எம்,பி பதவியிலிருந்து இராஜினா ரச் செய்து கொள்ள மாட்டார் எனத் தெரிகிறது

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் மார்ச் 22ஆம் திகதியன்று சபாநாயகர் எம்: எச் முகமத்தைச் சந்திப்பதற்கு இரு மணி நேரம் ஒதுக்குமாறு கேட்டிருந்தார். ஆனால் அன்றைய தினம் சபாநாயகர் அஷ்ரப்பை சந்திக்க மாட்டார் என்பதைத் தொடர்ந்தே அஷ்ரப் அன்றைய தினம் தமது எம். பி. பதவியை இராஜினாமாச் செய்ய மாட்டார் எனத் தெரிகிறது.

இந்த விடயம் குறித்து அஷ்ரப் என்னிடம் பேசினார். அன்றைய தினம் அவர் கேட்டுக்கொண்டபடி என்னால் அவருக்கு நேரம் ஒதுக்கிக் கொடுக்க முடியாமல் உள்ளது. நான் வெளிநாடு செல்கிறேன். நான் நாடு திரும்பியதும் அவர் என்னைச் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கிக் கொடுப்பேன் என்று சபாநாயகர் முகமத் கூறியுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போது போட்டியிட்ட ஆறு உள்ளூராட்சி மன்றங்களில் இரண்டில் தோல்வியுற்றதன் விளைவாகவே தனது எம்.பி. பதவியிலிருந்து இராஜினாமாச் செய்யப்போவதாக அஷ்ரப் அறிவித்திருந்தார்.

அஷ்ரப் தமது எம். பி, பதவியிலிருந்து இராஜினாமாச் செய்தால் அவரது இடத்திற்கு வேறொருவரை நியமிப்பதில் சில சட்டப் பிரச்சினைகள் எழுந்துள்ளதால் எம்.பி. பதவியிலிருந்து இராஜினாமாச் செய்வதற்கு அஷ்ரப் செய்துள்ள முடிவுக்கு கட்சியில் உள்ள உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. கட்சி சிறப்பாக இயங்குவதற்கு தலைவர் அஷ்ரப் பாராளுமன்றத்தில் இருக்க வேண்டுமெனச் சிலர் கேட்டுள்ளனராம்.

## சேதமடைந்த வீதிகளை திருத்துவதற்கு நடவடிக்கை

யாழ். குடாநாட்டில் உள்ள சேதமடைந்த வீதிகளை அபிவிருத்திசெய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கான ஆரம்பநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதன் ஒரு கட்டமாக குடா நாட்டில் உள்ள சேதமடைந்த வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு ஏற்படும் செலவுகள் குறித்த கணிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்படவுள்ளது. இக் கணிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் மேற்படி நடவடிக்கைக்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் குறித்து தீர்மானிக்கப்படும் என்று கொழும்பில் இருந்து கிடைக்கும்செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி நடவடிக்கையின் மற்றொரு முயற்சியாக அடுத்த வாரம் பருத்தித்துறைத் துறைமுகத்திற்கு வந்துசேரும் என்று எதிர்பார்க்கப்படும் கப்பலில் ஒரு தொகுதி தார்ப் பீப்பாக்கள் எடுத்துவரப்படவுள்ளன. (க, நி)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

12.03.94


எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 1224

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்:- இல்லை.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்;

41-9355, 43-1019, 26-0561, 26-0767, 26-5870
41-1227, 24-4664, 26-2125, 24-8197, 40-2829
26-7663, 24-5818, 28-1862, 26-5814, 27-6762.

## கண்ணீர் அஞ்சலி



## இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாண வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான உடற்பயிற்சி போட்டி இன்று பிற்பகல் இரண்டு மணியளவில் யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. பிரதிக்கல்விப்பணிப்பாளர் துரை தியாகராசா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பிபிரதமவிருந்தினராகவும், யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஃ ஃ ஃ ஃ

நல்லூர் இசைமன்றம் வழங்கும் கலைநிகழ்ச்சி இன்று பிற்பகல் 5. 30 மணியளவில் நல்லூர் சட்டநாதர் வீதியிலுள்ள இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்ச்சியில் இருவயலினிசை மற்றும் கதகளி பரதநாட்டியம் என்பன இடம் பெறவுள்ளது.

ஃ ஃ ஃ

லயன்ஸ்கழக யாழ்வலயம் ஒன்றின் ஏற்பாட்டில் திருநெல்வேலி சிறுவர் நிறை வாழ்வு இல்லத்தில் விளையாட்டு போட்டியும், பரிசு வழங்கலும் இன்று நடைபெறவுள்ளது.

ஃ ஃ ஃ

சரசாலை - நுணாவில் ஸ்ரீ சிதம்பர விநாயகர் ஆலய கூட்டுப்பிரார்த்தனைச் சபையும் சரசாலை இந்து மன்றமும் கூட்டாக இணைந்து நடாத்தும் பேச்சுப் போட்டிகள் இன்று காலை 9. 30 மணி தொடக்கம் யாழ் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலய மண்டபத்தில் ஏழு பிரிவுகளாக நடைபெறும் என மன்றச் செயலாளர் திரு. க. சிவசங்கரநாதன் அறிவித்துள்ளார். (24)

## மெய்வல்லுநர் போட்டி

புலோலி கிழக்கு ஆ. த. க. பாடசாலை இல்ல மெய் வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 2-00 மணிக்கு அதிபர் திரு. ஆ. மகேசு தலைமையில் நடைபெறும்.

பருத்தித்துறை கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆ. ராசேந்திரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார். (யோ)

## சம்பள கொடுப்பனவு

காங்கேசன் சீமெந்து ஊழியர்களின் தைமாத சம்பள கொடுப்பனவு நாளை திங்கட்கிழமை அன்று வர்த்தக வங்கியில் வைத்து வழங்கப்படும் எனபிரதமகணக்காளர் அறிவித்துள்ளார்.

# குடாநாட்டு உணவு விநியோகம்; நிகழ்ச்சித்திட்டம் சமர்ப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

கப்பல்மூலம் யாழ். குடாநாட்டிற்கு உணவுப் பொருள்களை எடுத்துவருவதற்கு இவ்வாண்டுக்கான முழுமையான திட்டம் ஒன்று கொழும்பு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டு யாழ். குடாநாட்டுக்கு தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விபரங்கள் மற்றும் அவற்றின் அளவீடுகள் ஆகியனவும் இப்பொருள்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டிய கால அட்டவணை ஆகிய விபரங்களைக் கொண்டதாக மேற்படி திட்டம் அமைந்துள்ளது.

அண்மையில் கொழும்பு சென்றிருந்த யாழ். செயலகத் திட்டப் பணிப்பாளர் திரு. எஸ். பத்மநாதன் மேற்படி திட்டத்தைக் கையளித்துள்ளார். இத் திட்டப்படி அத்தியாவசியப் பொருள்கள் குடாநாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டால் குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்களுக்கான பற்றாக்குறை ஏற்படுவதை தவிர்க்க முடியும் என்றும் திட்டப் பணிப்பாளர் திரு. எஸ். பத்மநாதன் தெரிவித்தார்.

கடந்தமாதம் 23ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற புனர்வாழ்வு இணைப்புக் குழுக் கூட்டத்தின்போது யாழ். குடாநாட்டுக்கான கப்பல் மூலமான அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விநியோகம் குறித்து ஆராயப்பட்டது. இக் கூட்டத்தில் திரு. பத்மநாதன் மேற்படி திட்டம் குறித்து பிரஸ்தாபித்தார்.

இத் திட்டம் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. (க, நி)

## குழந்தைகள் பாலுணவு எடுத்துவர நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

குழந்தைகளுக்கும் தாய்மாருக்குமான பாலுணவு வகைகள் மிகவிரைவில் கொழும்பில் இருந்து எடுத்து வரப்படவுள்ளன.

குடாநாட்டில் பாலுணவு வகைகளுக்கு தற்பொழுது இருக்கும் தட்டுப்பாட்டை நீக்குவதற்காக மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக யாழ். செயலக திட்டப்பணிப்பாளர் திரு. எஸ். பத்மநாதன் தெரிவித்தார்,

கொழும்பில் இருந்துஎடுத்து வரப்படும் இப்பால் உணவு வகைகள் பங்கீட்டு அடிப்படையில் கட்டுப்பாட்டு விலையில் விநியோகிப்பதற்குரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்றும் தெரியவருகிறது. (க) (நி)

## வேறுபாடுகள் இருப்பது கட்சி நிறத்தில் தான்

வாசுதேவ நாணயக்கார

(பத்தேகம)

தற்போதைய அரசாங்கத்தினதும், மக்கள் முன்னணியினதும் கொள்கையில் வேறுபாடு எதுவுமில்லை. வேறுபாடு இருப்பது இரு கட்சிகளின் நிறத்தில் மட்டும்தான். இவ்வாறு திரு. வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

பத்தேகம கூட்டம் ஒன்றில் பேசிய அவர்மேலும் தெரிவிக்கையில், ஐ. தே. கவைத் தோற்கடிக்க நீங்கள் பொது மக்கள் முன்னணியில் சேரக் கூடாதா என்றுபலர் என்னைக் கேட்கின்றார்கள். ஆனால் நாம் சொல்வது இதுதான். ஐ. தே. கவை தோற்கடிக்கும் நோக்கம் மக்கள் முன்னணிக்குக்கிடையாது காரணம் இருசராரும் ஒரே கொள்கையையே பின்பற்றுகின்றார்கள். ஒரே கொள்கையைக் கடைப்பிடிக்கும் மக்கள் முன்னணிக்கு ஐ தே. கவைத் தோற்கடிக்கும் சக்தி இல்லை ஐ தே.கட்சியை தோற்கடிப்பதானால் விளக்கமான கொள்கையும்வேலை திட்டமும் தேவை.

## ஒய்வூதிய வவுச்சர், தபால் றுகுணுவில் வரவில்லை

(வடமராட்சி)

பருத்தித்துறை துறைமுகத்துக்கு நேற்று வந்தடைந்த "றுகுணு" என்ற கப்பலில் இம்மாதத்துக்கான ஒய்வூதிய வவுச்சர்கள் எதுவும் எடுத்து வரப்படவில்லை,

மேலும் தபால் பொதிகளும் இக்கப்பலில் எடுத்து வரப்படவில்லை என்று யாழ் திட்டப்பணிப்பாளர் தெரிவித்தார். அடுத்த வாரம் பருத்தித்துறைக்கு வரும் என எதிர்பார்க்கப்படும் கப்பலிலேயே இவை எடுத்து வரப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக தெரியவருகிறது. (யோ)

## போலி அடையாள அட்டை தயாரித்த தமிழர் கைது

(கொழும்பு)

போலி அடையாள அட்டைகளை அச்சிட்டனர்என்ற குற்றச்சாட்டின்பேரில் இரு வடபகுதித் தமிழர்களை மட்டக்குழிப் பொலிசார் சந்தேகத்தின்பேரில் கைது செய்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.

மேற்படி சந்தேக நபர்கள் கைது செய்யப்படும்போது அவர்களிடம் இருந்து இது தொடர்பான பல தகவல்கள் பெறப்பட்டுள்ளதாகவும் பொலிசார் மேலும் தெரிவித்துள்ளனர்.

## துணைவேந்தருக்கு பாராட்டுவிழா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசாவின் சேவைநலனைப் பாராட்டும் முகமாக வரும் 23ஆம் திகதி பி: ப: 4 மணிக்கு நெல்லியடி ம: ம. வித்தியாலயத் திறந்த வெளி அரங்கில் விழா ஒன்று நடைபெறவுள்ளது. இந்த விழாவை வடமராட்சி மக்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.

## தொடர் அமர்வு

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் இயங்கும் தொலைக் கல்வி நிலையத்தில் பயி

## கால்நடைகளுக்கு குறி



## கந்தசாமி ஜெபிச்சந்திரன் (ஜெபி)

| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 13-10-1968 | 11-03-1994 |

அன்னாரின் பிரிவல் துயருறும்
குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

-நண்பர்கள்
நியூ சுபமாலா மோட்டோர்ஸ்

(7728)

## 31-ம் நாள் நினைவலைகள்!

### எமதருமைத் தாயே!

## திருமதிஇராஜேஸ்வரிசெல்லத்துரை

(ஆசிரியை கோண்டாவில் இந்துமகா வித்தியாலயம்)

மலர்வு: 22-08-1939 உதிர்வு: 11-02-1994

பத்துமாதஞ் சுமந்து பெற்றுப்
பரிவுடன் எமை வளர்த்து
நித்திரைதனை மறந்து நீயும்
தாலாட்டித் தமிழூட்டி சீராட்டி
உத்தமராய் உறுதியுள்ள புத்திரராய்
இத்தரையில் எம்முயர்வுக்காய்
உத்தமியே நீர் உமது சுகமனை
உவந்துமே அர்ப்பணித்திர்!
எத்தனை நாள் காத்து நின்றோம்!
எம்மருமைத் தாயே! ஏனம்மா எமை மறந்தீர்
இம்மண்ணில் உமது இலட்சியங்கள் ஈடேற
எம்மிதயங்களிலிருந்து ஏற்ற துணையாயிருப்பீர்!

லேட்டி லேன், கணவர்,
கோண்டாவில் மேற்கு, பிள்ளைகள்.
கோண்டாவில். (7733)

படும் எனபிரதமகணக்காளர் அறிவித்துள்ளார்.

## ஜயந்தி பூசை

(வடமராட்சி)

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் ஸ்ரீராமகிருஷ்ணரின் ஜயந்தியை முன்னிட்டு நாளை (திங்கள்) காலை, மாலை நேரங்களில் விசேட பூசை, பஜனை, விரிவுரை என்பன நடைபெறவுள்ளது

அதேசமயம் மிக அண்மையில் மருத்துவப் பகுதி இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த நான்கு மாணவர்கள் பாராட்டப்படுவார்கள். பருத்தித்துறை பட்டினசபையில் வேலைப்பகுதி தொழிலாளர்கள் நால்வர் கௌரவிக்கப் படுவார்கள். (யோ)

## வடபகுதிக்கு

அறியத்தருகிறோம்:

ஏற்கனவே இப்படியான சொத்துக்களுக்கு தவறுதலாக வாடகைப்பணம் அறவிடப்பட்டமைக்கு வருந்துகிறோம்.

எனவேஇப்படியானவீடுகள் வீட்டுச் சொத்துக்களுக்கு வாடகைப்பணம் செலுத்திக்கொண்டு இருப்பவர்கள் வடபகுதிக்கு வெளியே செல்வோரின் சொத்துக்கள் கண்காணிப்புப் பிரிவுப் பொறுப்பாளரை வாராந்தம் வியாழக்கிழமைகளில் கோண்டாவிலில் அமைந்திருக்கும் செயலகத்தில் சந்தித்து தங்களின் கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கலாம். தங்களின் கோரிக்கை உண்மை எனக் காணுமிடத்து வாடகைப் பணம் பொறுப்பாளரால் ரத்து செய்யப்படும் என்பதையும் அறியத்தருகிறோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## விபத்தில்

சிறுமி தவயோகம்-பிரமிளா என்பவர் தலையில் படுகாயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு பின்னர் மரணமானார். (யோ)

## கால்நடைகளுக்கு குறி சுடுவோருக்கு கோரிக்கை

### தமிழீழ பொருண்மியமேம்பாட்டு நிறுவனம்

(யாழ்ப்பாணம்)

கால்நடைகளுக்கு குறிசுடும் போது தோல் பதனிடலுக்கு முக்கியமானதாக இல்லாத பகுதிகளான கன்னம், காதுகள், கொம்புகள், ஏரி, பின்னங்காலின் கீழ்ப் பகுதிகள் மற்றும் குளம்புகள் போன்ற இடங்களில் குறிகள் மற்றும் அடையாளங்களை இடும்படியாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செய்திக் குறிப்பு ஒன்றில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தாவரப் பதனிடுதல் முறையிலான தோல்பதனிடுதல் முறையானது தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கைத்தொழில் பகுதியினால் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது. எதிர்காலத்தில் இது பரவலான குடிசைக் கைத்தொழிலாக அல்லது பாரிய கைத்தொழிலாக வளரும் வாய்ப்பு உள்ளது. இதற்கு மிருகங்களுக்கு குறிசுடும் வழக்கம் கால்நடைகளின் தோல்களில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. ஏனெனில் இறைச்சிக்காக கொல்லப்படும் விலங்குகளது தோல்கள் எதுவித சேதங்களும் அற்றதாக இருப்பது தோல்கள் பதனிடப்படுவதற்கு முக்கியமானதாகும். குறி சுடப்பட்ட தோல்கள் சந்தையில் மதிப்புக் குறைந்து காணப்படுவதுடன் பதனிடப்படுவதற்கும் கடினமானதாகும்.

எனவேதான் கால்நடை வளர்ப்போர் தமது கால்நடைகளுக்கு குறி சுடும்போது தோல் பதனிடலுக்கு அவசியமற்ற பகுதிகளில் குறி சுடும்படி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளது.

## "மாணவர் அறிவியல் நூலகம்"

விடுதலைப்புலிகள் மாணவரமைப்பின் மாணவர் அறிவியல் கழகத்தின் பொது நூலகம் தனது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது. அதே வேளை நூல் இரவல் வழங்கும் பகுதி தனது முழுமையான செயற்பாட்டை இன்றிலிருந்து ஆரம்பிக்கவுள்ளது.

## அறிவியல் கருத்தரங்கு தொடர் - 01

விடுதலைப் புலிகள் மாணவரமைப்பின் மாணவர் அறிவியல் கழகம் நடாத்தும் அறிவியல் கருத்தரங்கு தொடர்-01 எதிர்வரும் 16ஆம் திகதி மாலை 4.00 மணியளவில் அறிவியல் கழக மண்டபத்தில் நடைபெறும். அதில் 'அறிவியல்'பாடங்களை கற்பதில் தமிழீழ மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும், தாண்டவேண்டிய தடைகளும்' என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக பொருளியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. பா. சிவநாதன் அவர்கள் கருத்துரை வழங்குவார். எனவே மாணவர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

## வாதுவவில் தபால்பொதிகள்

அடுத்த வாரம் பருத்தித்துறைத் துறைமுகத்திற்கு வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படும் 'வாதுவ' என்ற கப்பலில் ஒரு தொகுதி தபால் பொதிகள் எடுத்து வரப்படவிருக்கிறது. எத்தனை தபால் பொதிகள் இக் கப்பலில் எடுத்து வரப்படும் என்பது குறித்து தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

றது.

மேற்படி சந்தேக நபர்கள் கைது செய்யப்படும்போது அவர்களிடம் இருந்து இது

## ஜனநாயக

என தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கொண்டவர்களை ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை இல்லாமல் செய்தது அரசியல் வாதிகள்தான். கட்சிகளின் தவறான நடவடிக்கையினால் தான் இந்த ஜனநாயக விரோத நடவடிக்கைகளில் ஜனதா விமுக்திபெரமுனை செயல்படவேண்டி வந்தது. வடக்கு கிழக்கிலும் இதே நிலைதான். எனவே நாட்டில் ஏற்பட்ட இந்த ஜனநாய வெறுப்புக்கு அரசாங்கமும் எதிர் கட்சிகளுமே காரணம் என்றார்.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் இயங்கும் தொலைக் கல்வி நிலையத்தில் பயிற்சி பெற்று வரும் இரண்டாம் ஆண்டு ஆசிரிய மாணவர்களின் இரண்டு நாள் தொடர் அமர்வு இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

## கப்பல்

தும்படி யாழ்ப்பாண அரச அதிபர் கோரியிருப்பதுடன் ஒரு பயணி ஒரு இடத்தில் மட்டுமே சோதனைக்குட்படுவது போதுமானதே என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## தமிழரின்

தமிழர் பிரச்சினையில் அக்கறைகாட்டத் தொடங்கியுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

### சுவாம்பிள்ளை மேரி யோசவ்

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், இல்லாலையை வசிப்பிடமாகவும், 83/1, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் தற்போது வசித்து வந்தவரும், இளைப்பாறிய ஆசிரியருமாகிய சுவாம்பிள்ளை மேரி யோசவ் அவர்கள் 10-3-94 இல் காலமானார்.

அன்னார் ஞானமணியின் அன்புக் கணவரும், மதுரம், (லண்டன்), ராணி (ஈச்சமோட்டை), அருட் சகோதரி ஸாண்ட்றா A. C. (பரியோவான் கல்லூரி ஆசிரியை), அன்ரன் தவராஜா, (லண்டன்), யோகா (லண்டன்), றொபேட் புவிராஜ் (கணக்காளர், வடக்கு-கிழக்கு கல்வித் திணைக்களம், திருகோணமலை), ஆகியோரின் அன்புத் தந்தையும், செபஸ்ரியன் ராஜேந்திரம், அன்ரனற் றஜனி, C. S. கிறிஸ்தோப்பர் (லண்டன்), பீற்றர்ஸன் விஜயசிங்கம் (நிர்வாகி ஷம் றொக் அக்கடமி), யசோதா (ஸ்ரீ சண்முக வித்தியாலயம், திருகோணமலை) ஆகியோரின் பாசமுள்ள மாமனாரும், தயான், சிந்தியா, டிலானி, றொஷானி, றணில், றமணி, றதினி, ஜோ, ஆகியோரின் நேசம் நிறைந்த பேரனுமாவார். அன்னாரின் நல்லடக்கம் யாழ். புனித கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்தில் இன்று 3 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டபின் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பீற்றர்ஸன் விஜயசிங்கம்
(மருமகன்)

83/1, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம். (7784)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 61ஆம் இலக்கத்தில் உள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.